# யாழ்நாதம்

**இதழ் 23** **2018 / 19**



வெளியீடு

**யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம்**

கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மங்கள விளக்கேற்றல் - யாழ் நாதம் நூலாசிரியர்.



மன்றத் தலைவியும், யாழ்நாதம் நூலாசிரியையும், காரியதரிசியுடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் இங்கு வசிக்கிறேன். இவ்விடம் அழகாக இருக்க வேண்டும்."

"It ought to be beautiful, I live here."

# யாழ்நாதம்

இதழ் 23 2018/19

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கல்லூரி கீதம் | 2 |
| 2. | மலராசிரியரின் மனதிலிருந்து..... | 3 |
| 3. | மன்றத் தலைவியின் வாழ்த்து | 5 |
| 4. | மங்கையற்கரசியார் | 7 |
| 5. | ஏமாந்த மீனின் சிறுகதை | 10 |
| 6. | மனதில் பட்டதும் சுட்டதும் | 13 |
| 7. | "ஏழிசை வல்லபி" - கே.பி. சுந்தராம்பாள் | 16 |
| 8. | பக்தி எமக்கு எதற்கு! | 23 |
| 9. | அன்பின் பெருமை | 26 |
| 10. | பழமொழிகளில் உடல் உறுப்புகள் | 37 |
| 11. | நெஞ்சையள்ளும் முத்தமிழ் காப்பியம் சிலப்பதிகாரம் | 39 |
| 12. | ஞானச் சிரிப்பு | 45 |
| 13. | உணர்வுகளைக் கையாளும் திறன் | 48 |
| 14. | இன்பத்தமிழ் | 50 |
| 15. | எங்கே புணர்த்திப் பாருங்கள். | 52 |
| 16. | சில சுகாதார டிப்ஸ் (பழமொழிகள்) | 53 |
| 17. | நீங்கள் அறிந்திருக்க வேண்டியவை | 54 |
| 18. | காதலும் கற்பும் | 55 |
| 19. | Ruthraveena It's Name and Fame | 58 |
| 20. | Nick Names | 63 |
| 21. | யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு இருபத்தி ஐந்தாவது ஆண்டு அறிக்கை 2018 | 65 |
| 22. | அஞ்சலிகள் | 67 |
| 23. | நன்றி சொல்ல வேண்டும் | 68 |


வெளியீடு

**யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் – கொழும்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி கீதம்

திருமிகு மெங்கள் யாழ்நகர்க் கணியாய்த்
திகழ்ந்திடுங் கல்லூரி - எங்கள்
பெருவரு மிந்துப் பெண்களுக் கொளியாய்ப்
பிறங்கிடுங் கல்லூரி - உயர்
மருவுறு கலைகள் யாவையு மின்பாய்
வழங்கிடுங் கல்லூரி - உனைப்
பெருகிடும் அன்பால் புந்தியில் வைத்துன்
புகழினை வாழ்த்தோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ

இந்து மதப் புகழ் எங்கும் விளங்கிட
இசைந்திடுங் கல்லூரி - இயல்
சிந்தை வளம்பெற மெய்ப் பொருளறிவைச்
சேர்த்திடுங் கல்லூரி - வளர்
செந்தமிழ் ஆங்கில வடமொழி அறிவைச்
சுரந்திடுங் கல்லூரி - உனை
வந்தனை செய்து பைந்தமிழ் மாலை
வாழ்த்தொடு சூடோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

மங்கையர் மாண்பை மன்பதை அறிய
முழங்கிடுங் கல்லூரி - ஒளி
பொங்குயர் அறிவுச் சுடரினை யுளத்திற்
பொறித்திடுங் கல்லூரி - இந்து
நங்கையர் வாழ்வின் இலட்சிய மனைத்தும்
நல்கிடுங் கல்லூரி - உனை
அங்கையில் மலர்கொண் டன்புடன் பாடி
அனுதினம் ஏத்தோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

கலைமகள் உலவக் களிநடம் புரியக்
கண்டிடுங் கல்லூரி - என்றும்
மலைமகள் கொழுநன் மலரடி போற்றி
மாண்புறுங் கல்லூரி - நித்தம்
நிலமகள் நெற்றித் திலகமென் றேத்த
நிலைத்திடுங் கல்லூரி - உனைத்
தலைமுறையாகத் தொழுதுளங் குளிரத்
துதி சொல்லிப் பாடோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலராசிரியரின் மனதிலிருந்து.....

யாழ் நாதம் - இதன் நாதம் என்றுமே ஸ்ருதி குறைந்ததுமில்லை. குறையப் போவதுமில்லை. காரணம் யார் தெரியுமா? அவர் தான் நாதலோலனும், ஆடற்பிரானுமான தில்லைக் கூத்தனாம் நடராஜப் பெருமானும், அவர் மைந்தன் மூத்த, கணபதி பாடசாலை வளாகத்துள் அமர்ந்து எம்மை எல்லாம் அணைத்துக் காக்கும் இராஜவரோதயப் பிள்ளையாருமே தான்.

யாழ்/ இந்து மகளிர் கல்லூரியில் கல்விச் செல்வம் பெற்று, இன்று கொழும்பிலே வாழும் யாழ்/ இந்து மகளிர் பழைய மாணவிகளின் படைப்பே இந்த யாழ் நாதம். இச்சஞ்சிகை மலர்களில் மல்லிகையாய், மாதங்களில் மார்கழியாய், கலைகளில் ஓவியமாய், காற்றிலே தென்றலாய் சுவையுடன் இனிய நாதம் பரப்பி வருவதையிட்டு யாம் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றோம். பெற்றெடுத்த தாய்க்கு அடுத்து ஒருவர் மனதில், நன்றியுணர்ச்சியுடன் பதிந்திருக்க வேண்டியது. அவர் கற்று சமுதாயத்தில் அவரை மிளிர வைத்த, அவரது கல்விக் கூடமேயாம். அந்த விதத்தில், எம் மனதில் என்றும் இனியவளாய் நிற்பவள், யாழ்/ இந்து மகளிர் கல்லூரியே தான். இவள் பற்றிய ஆரம்ப நற்சிந்தனைகளை மீட்டவும், அவள் துதி பாடவும் அவளது பெருமைகளைப் பறைசாற்றவும் எமக்குக் கைகொடுத்து உதவுவது எமது சஞ்சிகை "யாழ் நாதம்" ஆகும்.

இதன் வளர்ச்சிக்கு எமக்கு பல்வேறு உதவிகளைப் புரிந்து வரும் எமது அன்பிற்குரிய ஆளுமைமிக்க எமது மன்றத் தலைவி அபிராமி கைலாசபிள்ளை அவர்களை இவ்விடத்தில் நன்றியோடு குறிப்பிட்டாகத்தான் ஆகவேண்டும் இத்தோடு நின்று விடாமல், அழைத்த போதெல்லாம் எனை நாடிவந்து ஆலோசனை தந்துதவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடை பொது செயலாளர் திருமதி மிதிலா ஸ்ரீ பத்மநாதன் அவர்களுக்கும் நன்றி சொல்லத்தான் வேண்டும். சங்கத்தின் வளர்ச்சிக்கு மனமுவந்து தம்மால் முடிந்த வரை நல்லாதரவு தரும் எமது கொழும்புகிளை மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தமது நேரத்தையும் சிரமத்தையும் பெரிதுபடுத்தாது யாழ் நாத சஞ்சிகைக்கு மனமுவந்து மலர்ந்த முகத்துடன் தமது ஆக்கங்களை நல்கிய அனைத்து சான்றோர்களுக்கும், விளம்பரங்கள் தந்துதவிய வர்த்தகப் பெருந்தகைகளுக்கும். இச் சஞ்சிகையின் அச்சுப்பிரதியைச் சரிபார்க்க உதவிய அன்புச் சகோதரிகளுக்கும், இவ்விதழை அழகாக அச்சிட்டுத் தந்த யுனி ஆர்ட்ஸ் நிறுவனத்திற்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது மனம் நிறைந்த உளம் கனிந்த நன்றியைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நன்றி

வணக்கம்.

நூலாசிரியர்

**திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு**

பழைய மாணவி, யாழ்/இந்து மகளிர் கல்லூரி

முன்னாள் அதிபர், யாழ்/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்றத் தலைவியின் வாழ்த்து

யாழ் நாதம் இதழ் வெளியிடப்படுவது ஒரு சாதனை என்று தான் கூறவேண்டும். யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கக் கொழும்புக் கிளையில் பல அங்கத்தவர்கள் இருப்பினும், பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஒத்துழைப்புத் தருபவர்கள் ஒரு சிலராகவே உள்ளனர். உறுப்பினர்கள் அவர்களது குடும்பத்தாரின் எழுத்தாற்றலை வெளிக் கொணரத் தளம் அமைக்கவே யாழ்நாதத்தை வருடாந்த இதழாக வெளியிடுகிறோம். இந்த வாய்ப்பினைப் பயன்படுத்த சகல அங்கத்தவர்களும் முன்வர வேண்டும்.

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பவளவிழா (1943-2018) ஞாபகார்த்தமாக யாழ்ப்பாண பழைய மாணவ சங்கத்தினதும், கொழும்பு, கனடா அவுஸ்திரேலியா, இலண்டன் கிளைச் சங்கத்தினதும் ஒன்றிணைந்த நிதிப்பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட “பவளவிழா மண்டபம்” வட மாகாண முதலமைச்சர் நீதியரசர் கௌரவ க. வி. விக்கினேஸ்வரன் அவர்களால் 2017ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 06ஆம் திகதி வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. பழைய மாணவர்களின் ஆற்றலுக்கு இது ஒரு சாதனையாகும்.

தமது எழுத்துத் திறனைப் பெண்கள் வெளிக் கொணரச் செய்யும் ஒரு ஏடாக யாழ் நாதம் விளங்க வேண்டும் என்ற எமது பேரவா. நிறைவு பெற வருங்காலத்திலாவது எமது உறுப்பினர்கள் முன்வருவார்கள் என்று நம்புகிறேன். அத்துடன் இவ்வாண்டு வைத்தியத்துறைக்கு நான்கு மாணவர்களும் பொறியியல் பீடத்திற்கு ஒரு மாணவியும் தெரிவானதையிட்டு பெருமையடைகிறேன். மேலும் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் பழைய மாணவிகளாகிய எங்களது உதவி என்றும் வழங்கப்படும். தாயை மறக்க முடியாது போன்று எமது கல்விச் செல்வத்தைத் தந்த எமது கல்லூரியையும் எம்மால் மறக்க முடியாது. அதன் வளர்ச்சியில் என்றும் எமது பங்கு தொடரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் சம பங்காற்றி பணிகளை முன்னெடுத்துச் செல்வார்கள் என்ற நம்பிக்கையுடன் யாழ் நாதம் மலர் ஆசிரியையும் ஒத்துழைப்பு நல்குபவர்களையும் வாழ்த்தி விடை பெறுகிறேன்.

**திருமதி அபிராமி கைலாசபிள்ளை**
மன்றத்தலைவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கையற்கரசியார்

"மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும்" என்பது பெரியோர் வாக்கு. உலகில் உள்ள எல்லாப் பெண்களுமே மங்கையற்கரசிகளாக திகழ வேண்டும் என்பது இறைவன் சங்கல்பம். அதன் அறிகுறியாக உமாதேவியாருக்கு தனது இடப்பாகத்தினை கொடுத்து பெண்களுக்கு சமவுரிமை கொடுத்துள்ளார் சிவபெருமான். இதற்கு உதாரணமாக பெரிய புராணத்தில் சேக்கிழார் குறிப்பிடுகின்ற சோழமன்னனின் மகளும், பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாறனின் மனைவியுமாகிய மானி எவ்வாறு சைவமும் தமிழும் பாண்டிநாட்டில் செழித்தோங்கச் செய்து மங்கையர்களுக்கு அரசியானார் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வளவன்கோன் மங்கையாகிய மானி, சிவம் பெருக்கும் சோழநாட்டில் பிறந்து, பாண்டி நாட்டில் வாழ்க்கைப்பட்டாள். பாண்டி நாட்டு மக்கள் திருநீறு பூசவும், பெரும் பெயர்க கடவுளின் மந்திரமான நமச்சிவாய மந்திரத்தைச் செபிக்கவும் முடியாமல் திண்டாடினார்கள். திருநீறு பூசியவரைக் கண்டால் கண்டுமுட்டு, பஞ்சாட்சரத்தை செபிப்பதை கேட்டால் கேட்டு முட்டு, என்று புறம் தள்ளுகின்ற சமணர்கள் மத்தியில் சைவர்கள் அவமானமடைந்து உள்ளத்தால் நலிவுற்றிருந்தார்கள்.

சைவசமயப் பாரம்பரியத்தில் ஊன்றித் திளைத்த மானி, கணவன் சமணசமயத்தை சார்ந்த போது "அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி" என்பதற்கு ஏற்ப மக்கள் எல்லோரும் சமணத்திற்கு மாற, தான் மட்டும் மாறாது நெஞ்சில் மறைவாக திருநீறு அணிந்து, மனதார மனத்திற்குள் பஞ்சாட்சர மந்திரம் செபித்து சைவராகவே வாழ்ந்து வந்தார்.

இவ்வேளையில், சீர்காழியில் மூன்று வயது சிறுவன் உமாதேவியாரிடத்தில் பொற்கிண்ணத்தில் பாலுண்டார் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விப்பட்ட மாத்திரத்தில் அவரது இருமுலைகளிலிருந்தும் பால் சுரந்தது.

"சுரந்த திருமுலைக்கே துய்யசிவஞானம்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்ல - சுரந்த
தனமுடையாள் தென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையாள் அன்பிருந்தவாறு"

என்று திருவியலூர் உய்ய வந்த தேவ நாயனார் அவரது அன்பின் உச்சவெளிப்பாட்டை புகழ்ந்துரைக்கின்றார்.

இத்தெய்வக் குழந்தையினால் பாண்டி நாட்டிலும் சைவஒளி பரவச் செய்ய வேண்டும் எனத் திருவுளம் கொண்டு மந்திரி குலச்சிறையாருடன் ஆலோசனை செய்து. திருஞானசம்பந்தப் பெருமானை மதுரைக்கு வரவழைத்தார். முதன் முதல் அரசியும் சம்பந்தரும் சந்திக்கும் போது

"சூழுமாகிய பரசமயத்திடை தொண்டு
வாழும் நீர்மையீர் உம்மை காணவந்தனம்"
என்று கூறுகின்றார்.

மதுரைக்கு வந்த சம்பந்தப்பெருமான் பாண்டியனது வெப்புநோயை நீக்கியதோடு அவனது கூனும் நிமிரச் செய்தார். முழுமனதோடு சைவத்தை தழுவிய 63 நாயன்மார்களுள் ஒருவனாகத் திகழும் வண்ணம், அவனது செயற்பாடுகளை மாற்றியமைக்கக் கூடிய பக்குவ நிலை எய்த திருவருள் பாலித்தார். இத்துடன் சமணர்களை அனல் வாதம் புனல் வாதம் ஆகியவற்றில் வென்று "வெற்றி கொள்" திருநீற்றின் ஒளிவிளங்கும் வண்ணம் பாண்டியநாடு மேன்மை படைக்க திருவருட்திறனைக் கையாண்டார்.

இந்நிலையில், வெற்றிற்கு எல்லாம் கால்கோள் வகுத்த மங்கையற்கரசியின் சைவமாண்பினை உலகுக்கு உணர்த்த அவரைக் குறித்து ஒரு தேவாரப் பதிகம்

"மங்கையற்கரசி வளவர் கோன் பாவை
வரிவளை கைமடமானி
பங்கயற் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாள்தோறும் பரவ....."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பாடியனார். அவர் மீனாட்சி சுந்தரரேசர் பெருமானுக்கு திருத்தொண்டு செய்து வழிபட்ட திறனின் பலனே இது என்று சுட்டிக்காட்டுகின்றார்.

இவ்வாறான சம்பந்தப் பெருமான் அவதார நோக்கமான
"வேதநெறி தழைத்தோங்க
மிகுசைவத் துறைவிளங்க
திருநீற்றின் ஒளிசிறக்க"

வைக்கும் பணியை மதுரையில் திருவருள் துணைகொண்டு நிறைவேற்ற மங்கையற்கரசியாரே வழிசமைத்துக் கொண்டுள்ளார்.

"மானி" என இயற்பெயர் கொண்ட பெண் செயற்கரும் செயலைச் செய்து மங்கையற்கு அரசியாக கணிக்கப்பட்டு, நாளடைவில் அவரது இயற்பெயர் மறைந்து, மங்கையற்கரசியே அவர் சொந்தப் பெயராக வழங்கியது.

பாண்டிய அரசகுலத்திற்கு நேர இருந்த பழியைத் தீர்த்தது அந்தத் தெய்வப்பெண். பாண்டிநாட்டில் படிந்திருந்த அஞ்ஞான இருளை அகற்றி தெய்வமணம் கமழச் செய்த அம்மையார் என்பதை சேக்கிழார் பெருமான்.

"மங்கயற்கு தனியரசி எங்கள் தெய்வம்
வளவர் திருக்குலக் கொழுந்து வளைக்கை மானி
செங்கமல திருமடந்தை கன்னிநாடன்
தென்னன் குலப்பழிதீர்த்த தெய்வப்பாவை"

என்று அவரது தவமாண்பினை விதந்து போற்றுகின்றார்.

ஆகவே, இந்து மகளிர் கல்லூரியை வழிநடத்துகின்ற உவர்குலப் பெண்கள், தொடர்ச்சி வளர்ச்சி ஆகியனவற்றுடன் இன்றும் உயிர்த்துடிப்புடன் வாழுகின்ற சைவமும் தமிழும் வளர்க்கும் பணியை, மேலும் சிறந்து விளங்க முன்னெடுத்துச் செல்வார்களாக.

**செல்வி மனோறா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாந்த மீனின் சிறுகதை

பசுமை நிறைந்த வயல்வெளிகள். தெரு இரு மருங்கிலும் வேப்ப மரம், புளியமரம் நிறைந்த கோவளம் என்ற ஊரில் அழகிய குளம் ஒன்று இருந்தது.

அக்குளத்தில் கிராமத்து மக்கள் கிணறு வசதியின்மை காரணமாக குளத்தில்தான் துணி கழுவுதல், குளிப்பது, ஆடு மாடுகளை குளிப்பாட்டுவது போன்ற விடயங்களுக்காக அக்குளத்தை பயன்படுத்தி வந்தார்கள்.

எனவே, எந்த நேரமானாலும் குளத்தங்கரையில் சன நடமாட்டம் இருந்து கொண்டே இருக்கும்.

குளத்தின் பக்கத்தில் பெரிய ஆலமரம் பல விழுதுகள் கொண்டு கம்பீரமான தோற்றத்துடன் காட்சி அளித்தது.

கிராமத்து மக்கள், ஆலமரத்தடியில் வம்பு பேசுபவர்களும், சிறுவர்கள் ஓடி விளையாடுவதுமாக இருந்தார்கள். இத்தகைய கிராமத்திலுள்ள குளத்தில் சில மீன்கள் வாழ்ந்து வந்தன. இம்மீன்களுக்குள் அழகிய ராஜா ராணி மீன்கள் குஞ்சுகளுடன் வாழ்ந்து வந்தன.

ராணி. மீன் குஞ்சுகளுக்கு புத்திமதி கூறின. மனிதர்கள் எங்களை வலை வீசிப் பிடிப்பார்கள். அதனால் நீங்கள் நீருக்கு, மேலே போகக் கூடாது. சண்டை பிடிக்காமல் ஒற்றுமையாக இருக்க வேண்டும். அத்துடன் மனிதர்களின் குணம் எந்த நேரத்திலும் மாறக் கூடும்.

அவர்கள், வஞ்சகம். பொறாமை, ஏமாற்றுவது. ஒருவரைக் கெடுக்கும் புத்தி, மனம் தூய்மையின்மை, ஒருவர் நல்லது செய்வதற்கு முட்டுக்கட்டையாக நிற்றல் போன்ற கீழ்த்தரமான செயல்களைச் செய்யும் மனிதர்களின் குணம், திடீரென மாறும் போது எங்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்து கொன்று விடுவார்கள். எனவே அவர்களை சீண்டாதீர்கள் என்றது தாய் மீன்.

காரணம் சின்ன மீன்கள் துள்ளி குதித்து விளையாடும். அங்கு குளிக்க வரும் மனிதர்களின் கால்களை செல்லமாக கடிக்கும். இது போன்ற செயலுக்காகத்தான் ராணி மீன் குஞ்சுகளுக்கு எச்சரிக்கை செய்தது.

ஆனால் மற்றைய மீன்கள் "மனிதர்கள் எங்களை என்ன செய்ய முடியும். நீங்கள் பயப்பட வேண்டாம்" என்றன. "எதற்கும் ஜாக்கிரதையாக இருங்கள்" என்று கூறின.

ஒரு நாள், கொக்கு ஒன்று பசியால் அங்குமிங்கும் அலைந்து பறந்து திரிந்தது. எல்லா இடத்திலும் நீர் நிலைகள், குளங்கள் வற்றியே இருந்தன. எங்கெல்லாமோ அலைந்தன. பசியோ கொக்கை வாட்டியது.

இனி என்ன செய்யலாம்! என்று சிந்தித்து கடைசியாக ஒரு முயற்சி செய்து பார்ப்போம் என்று நினைத்து வெகு தூரம் நோக்கி பறந்தது.

"முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" என்பது போல் கோவளம் என்ற ஊரில் நிறைய நீருடன் குளம் இருப்பதைக் கண்டது. அக்குளத்தங்கரையில் வந்து நின்றது, அக்கொக்கு.

எப்படியும் இங்கு நல்ல உணவு கிடைக்கும் என்று ஆவலோடு காத்திருந்தது. "பொறுத்தார் பூமி ஆள்வார் என்பதற்கிணாங்க" பொறுமையுடன் கொக்கு காத்து நின்றது.

"கொக்கு ஒன்று குளத்தங்கரையில் நிற்கிறது. அதன் பக்கம் போகாதீர்கள்" என்று ராணி மீன் கூறியது. தாயின் சொல்லைக் கேட்காத சின்ன மீன் அதன் பக்கம் போய் அழகு காட்டி விட்டு ஓடியது.

கொக்கு, அந்த மீன் திரும்பவும் வரும், எப்படியாவது பிடிக்கலாம் என்று காத்து நின்றது.

சின்ன மீன் என்னை கொக்கு பிடிக்கவில்லைத்தானே என்று மறுபடியும் கொக்குக்கு அழகு காட்ட வந்து மேலே துள்ளியது. உடனே கொக்கு அதனை வாயில் கௌவிக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்ன மீன் "அம்மா" என்று கத்தியது. தாய் மீன் கண்டு கொண்டது. என் சொல்லை கேட்காது ஆபத்தில் மாட்டிக் கொண்டதே. நான் என்ன செய்வேன்! என்று தாய் மீன் யோசித்தது. முன்பு ஒரு சமயம் இப்படித்தான் என் இளைய மகன் கொக்கிடம் ஆபத்தில் மாட்டியபோது எனது "சமயோசித புத்தியால்" காப்பாற்றினேன். அது போல் இப்போதும் சின்ன மீனைக் காப்பாற்ற வேண்டும் என முடிவு செய்தது.

தான் நீருக்கு மேலே வந்தால் அதைப் பார்த்து தன்னையும் கொக்கு பிடிக்க வரும். அப்போது அது வாயைத் திறக்கும். வாயில் இருக்கும் சின்ன மீன் தண்ணீரில் விழுந்து மறையும். தானும் மறைந்திடலாம் என்று முன்பு நடந்த நிகழ்வை மனதில் வைத்து செயல்படத் தொடங்கியது தாய் மீன்.

எனவே, ராணி மீன் தண்ணீருக்கு மேலே வந்தது. பெரிய மீன் ஒன்று மேலே வருவதை கொக்கு பார்த்தது. சட்டென, கொக்கு வாயில் கௌவியிருந்த மீனை காலுக்கடியில் வைத்துக் கொண்டு, மேலே வந்த பெரிய மீனை பிடித்து கொஞ்சமும் தாமதியாது உடனே விழுங்கியது.

பின்னர் காலில் வைத்துக் கொண்ட சின்ன மீனையும் விழுங்கியது.

எல்லோரும் எல்லா நேரமும் ஏமாறமாட்டார்கள். ஒரு சமயம் ஏமாந்தால், மறுசமயம் விழித்துக் கொள்ள மாட்டார்களா? முட்டாள் மீன், என்னை ஏமாற்ற நினைத்து, தான் ஏமாந்து கொண்டது என கொக்கு பெருமை கொண்டது.

இன்று எனக்கு நல்ல உணவு கிடைத்தது என்று கூறிக் கொண்டு "ஏமாற்றாதே ஏமாறாதே" என பாடிக் கொண்டு, என்னை ஏமாற்ற நினைத்த மீன் ஏமாந்து போனதே என்ற களிப்போட அவ்வூரை விட்டு பறந்து போனது புத்திசாலிக் கொக்கு.

ஆக்கம் : **செல்வி வ. கலா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதில் பட்டதும் சுட்டதும்

விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள். தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக உலகம் சுருங்கி நிற்கின்றது; ஒரு நொடிப் பொழுதில் உலகத்தின் எந்த மூலையில் நடக்கும் விடயங்களையும் அறியக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது; பரந்த உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருப்பதான ஒரு மாயை எம்மில் தோற்றம் பெற்றிருக்கிறது. சிறுவர் தொடக்கம் பெரியவர்கள் வரை இணையம், முகப்புத்தகம், மொபைல் பாவனை போன்ற சமூக வலைத்தளங்களைப் பெரிதும் பயன்படுத்திவருகின்றார்கள்.

இளம் தலைமுறையினரை ஆட்டிப்படைக்கும் இத்தகைய சமூக வலைத்தளங்கள் இளம் பெண்களுக்கு செல்போனில் பயன்படுத்தப்படும் வாட்ஸ்அப் (Whatsapp) மூலமாகவும் ஆபத்துக்கள் ஏற்பட்டுவருவதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள். தொழில்நுட்ப வசதிகளை் மூலம் பல்வேறுப்பட்ட பயன்கள் கிடைக்கப்பெற்றாலும் அதற்கேற்ப ஆபத்துக்களும் பெருகிக் கொண்டே வருகின்றது.

பல்தேசியக் கம்பனிகளின் கவர்ச்சி விளம்பரங்களால் உருவேற்றப்பட்ட சமூகத்தினர் அதற்கு அடிமையாகி பெருந்தொகை பணத்தையும் இழந்து வருகின்றனர். தாம் பொருதாளார ரீதியாகச் சுரண்டப்படுகிறோம் என்பதைக் கூட அறியாமல். பெருமளவு நேரத்தையும் வீணடித்துக் கொண்டிருக்கிறார்கள். தொழிலில் அக்கறையின்மை கல்வியில் அக்கறையின்மை, நூல்களை வாசிப்பதில் அக்கறையின்மை, விளையாட்டுக்கள் போன்ற தேக ஆரோக்கியச் செயற்பாடுகளில் அக்கறையின்மை, ஏன் உணவு அருந்துவதில் கூட அக்கறையின்மை போன்ற நிலைப்பாடுகள் தோன்றுவதற்கு சமூக வலைத்தளங்களின் ஆதிக்கமே காரணமாக மேலோங்கி நிற்கிறது. போதைக்கு அடிமையானவனைக் கூட அதிலிருந்து விடுபடச் செய்துவிடலாம். ஆனால் வலைத்தளங்களினால் அடிமையாக்கப்பட்டு அதேகெதியென உழன்று கொண்டிருக்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய சமுதாயத்தை அந்த ஆபத்துக்களிலிருந்து வெளியே கொண்டு வரமுடியாத நிலை தோன்றியுள்ளது. இது ஒரு சாபக்கேடு என்றே சொல்ல வேண்டும்.

செல்போன் பாவனை என்பது ஒரு முக்கிய செயற்பாடாக மாறி பாவனையார்களை ஆட்டிப்படைக்கிறது. மொபைல் கம்பனிகள் தமது இலாபத்தைப் பெருக்குவதையே குறிக்கோளாகக் கொண்டு புதுபுது அறிவித்தல்களையும், சலுகைகளையும் வெளியிட்டு வருகின்றன. கூடுதலாக றீலோட் செய்பவர்களுக்குப் பணப்பரிசில்களும் வேறும் பரிசுகளையும் வழங்குவதாக அறிவித்து வாடிக்கையாளர்களை தம்பக்கம் திசைதிருப்பி வருகின்றன. இதனால் பலர் றீலோட் செய்வதையே நோக்காகக் கொண்டு பெருந்தொகையான பணத்தை வீணாக்கி வருவதும் கண்கூடு. தாம் பொருளாதார ரீதியாகச் சுரண்டப்படுகின்றோம் என்பதைத் தெரியாமல் ஏமாளிகளாகவே இருக்கிறார்கள். "சொன்னாலும் வெட்கமடா? சொல்லாவிட்டால் துக்கமடா? பணம்படைத்தவர்கள் செலவு செய்கின்றமை வேறு. அவர்களைப் பார்த்து பொருளாதார வசதியற்றவர்களும் இந்த வலையிற்சிக்கித் தவிர்ப்பதுடன் கடன் பெறுதல் உட்பட பொய், களவு என்பவற்றிலும் கைதேர்ந்தவர்களாக மாறி சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டவர்களாகவும் ஆகியுள்ளனர். அடுத்தவேளை உணவுக்கே தாண்டவமாடும் நிலையிலுள்ளவர்கள் கூட மேற்கூறப்பட்ட செயற்பாடுகளைக் கைவிடுவதாக இல்லை.

என்ன சொன்னாலும் இச் சமுதாயம் ஏற்றுக்கொள்ளாது பட்டால் தான் தெரியும். கையடக்கத்தொலைபேசியை காதில் வைத்துக்கொண்டு பாதையில் நடந்துகொண்டு தம்மை மறந்த நிலையில் உரையாடிச் சென்றவர்கள் விபத்துக்களில் சிக்கிக்கொண்டிருக்கின்றார்கள். சிலர் மரணமும் அடைந்துள்ளார்கள். முன்பு தொலைபேசிகள் குறைவாக இருந்த காலத்திலும் மக்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றி வந்துள்ளார்கள் தானே என்று ஒரு பெரியவர் சொல்லியிருந்தார். அதில் ஒரு நியாயம் இருப்பதாக எனக்குப்பட்டது.

இன்று எங்கே எப்படி பேசுவது என்ற விவஸ்தையே இல்லாதவர்களாக பாதைகளில் நடந்து செல்லும் போதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனங்களில் பயணிக்கும் போதும், பொதுமக்கள் கூடும் இடங்களிலும் தம்மை மறந்து உரத்துப்பேசி மற்றவர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துகிறோம் என்பதை உணர முடியாதவர்களாக இருக்கிறார்களே அவர்களை என்னவென்று சொல்வது. நல்லது எது கெட்டது எது என்று பகுத்தறிந்து பார்க்க முடியாத ஒரு சமுதாயம் உருவாகி வருவதைத்தான் நாம் காணவிருக்கின்றோம். என்ற எச்சரிக்கையைச் சொல்வதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாது என்ற உண்மையைத் தெரிந்து கொண்டால் போதும்.

**கலாபூஷணம் – தமிழ்த் தென்றல்**
**திரு. தம்பு சிவசுப்பிரமணியம்**
முன்னாள் கொ/ தமிழ்ச் சங்கத் தலைவர்,
இன்நாள் நிதிச் செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஏழிசை வல்லபி" - கே.பி. சுந்தராம்பாள் (11.10.1908-19.09.1980)



கே. பி. சுந்தராம்பாள் அவர்கள் பிறந்த திகதி 11.10.1908 ஆகும். பிறந்த ஊர் கரூரை அடுத்த கொடுமுடி - தாயார் பாலம்மாள் - தந்தையார் கே.பியின் சிறிய வயதிலேயே காலமாகிவிட்டார். சகோதரன் ஒருவர் - கனகசபாபதி, சகோதரி - சுப்பம்மாள் குடும்பத்தலைவர் காலமாகி விட்டதால் வறுமையில் வாடியது குடும்பம்.

கடும் வறுமை காரணமாக ஒருமுறை குடும்பமே தற்கொலைக்கு முயற்சித்தது. சிறுமி சுந்தராம்பாள் உறுதியளித்ததின் பேல் அன்றாடப் பிழைப்பைத் தேடி கரூருக்கு இரயிலில் பிரயாணம் செய்தார்கள்.

இரயில் பிரயாணத்தின் போது சினிமாவில் வருவது போல் மணவாள நாயுடு என்பவர் இந்த ஏழைக் குடும்பத்திற்கு உதவ முன் வந்தார். அவர் கரூர் முனிசிபாலிடியில் தொழில் புரிந்தார். சற்று வசதி படைத்தவர்.

அவரது இல்லத்தில் தங்கியிருந்த போது கே. பி. அவர்கள் இரவு வேளையில் வாசத்திண்ணையிலிருந்து ராகம் போட்டு ஏதாவது பாடிக்கொண்டிருப்பார். கணீரென்ற குரல்; ஒரு நாள் அதிகாலை இரண்டு பொலிஸ்காரர்கள் வந்து கே.பி யை அழைத்தார்கள். பொலிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள். தாயார் பாலம்மாள் அழுது குழறினாள். சிறுமி சுந்தராம்பாள் கலங்கவில்லை.

போலிஸ் நிலையத்தில் இன்ஸ்பெக்டர் "நடு இரவில் பாடியது யார்?" என்று கேட்டார். சிறுமி தான்தானென்றாள். அதிகாரி நம்பவில்லை; பாடச்சொன்னார். கம்பீரமாகப் பாடினார் கே. பி. இன்ஸ்பெக்டர் சங்கீத இரசிகராக இருக்க வேண்டும். வேலு நாயர் என்பவரிடம் அனுப்பி வைக்கப்பட்டார். அதுதான் சுந்தராம்பாளின் திருப்புமுனை - குழந்தை நட்சத்திரமானார்.

ஏழு வயதில் அவர் நடித்த முதல் நாடகம் நல்லதங்காள் - தனது சொந்த வாழ்க்கை போலவே இருந்ததால் கனகச்சிதமாக நடித்தார். கே.பி. வேலுநாயர் நாடகக் கம்பனியில் நடிக்கத் தொடங்கிய சுந்தராம்பாள் படிப்படியாக முன்னேறினார். அன்னாரின் பாடல்கள் பெரும் வரவேற்பைப் பெற்றன. அவரின் புகழ் தமிழ் நாடெங்கும் பரவியது. தொடர்ந்து "ஸ்பெஷல்" நாடகங்களில் நடிக்கலானார்.

நாடகமேடையில் கே.பி. முன்னேறிக் கொண்டிருந்த போது தமிழ்நாடக உலகின் முடிசூடா மன்னராகத் திகழ்ந்தவர் எஸ். ஜி.கிட்டப்பா. அவர் பிறந்த திகதி 26.08.1906. இயற்பெயர் இராமகிருஷ்ணன். ஆனால் எல்லோரும் 'கிட்டப்பா', 'கிட்டன்' அழைக்க அதில் கிட்டப்பா என்ற பெயர் நிலைத்துவிட்டது. அழகும். இனிய குரலும் உடைய கிட்டப்பாவிற்கு பெண் கொடுக்கப் பலர் முன் வந்தார்கள் - ஆனால் பெற்றோர் பார்த்த கிட்டம்மாள் என்ற பெண்ணை 24.06.1923 இல் கிட்டப்பா திருமணம் செய்துகொண்டார். அப்போது கிட்டப்பாவின் வயது பதினேழு மாத்திரமே!

தொடர்ந்து கிட்டப்பா நாடகங்களில் நடித்துக் கொண்டிருந்தார். அவர் நடித்த "தசாவதாரம்" நாடகம் ஒரே ஆண்டில் இருநூறு தடவைகள் மேடை ஏறியமை இங்கு கவனிக்கத்தக்கது.

இந்தக் காலகட்டத்தில் சுந்தராம்பாள் இலங்கையில் நாடகங்களில் நடித்துக் கொண்டிருந்தார். "கிட்டப்பாவையும், சுந்தராம்பாளையும் இணைத்து ஜோடியாக நடிக்க வைத்தால் நாடகங்கள் பிரமாதமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையும்; வசூலும் அமோகமாக இருக்கும்" என நாடக அமைப்பாளர்கள் எண்ணினார்கள்.

அதன்படி, எமது இலங்கைக்கு வந்து நாடகங்களில் நடிக்கும்படி கிட்டப்பா சகோதர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அந்த அன்பான அழைப்பை ஏற்று கிட்டப்பாவும் அவரது சகோதரர்களும் 1925ம் ஆண்டு இறுதியில் இலங்கைக்கு வந்தார்கள்.

எஸ்.ஜி. கிட்டப்பாவும், கே.பி. சுந்தராம்பாளும் இலங்கையில் "வள்ளி திருமணம்" நாடகத்தில் வேலனாகவும், வள்ளியாகவும் போட்டி போட்டுக் கொண்டு நடித்தார்கள். அவர்கள் இருவரும் நாடகத்தில் பாடிய பாடல்கள் இரசிகர்களின் அமோக பாராட்டுக்களைப் பெற்றன.

தமிழ் நாட்டிற்குத் திரும்பிய பின்னரும் சுந்தராம்பாளும், எஸ். ஜி.யும் பல நாடகங்களில் இணைந்து நடித்தார்கள். அவர்கள் புகழ் திக்கெட்டும் பரவியது. மேலும் 'கோவலன்', 'ஞானசௌந்தரி' வள்ளி திருமணம் போன்ற நாடகங்கள் 'சக்கை' போடு போட்டன. பேசும் படங்கள் வராத அந்தக் காலகட்டத்தில் கிட்டப்பாவும், கே.பி.யும் பாடிய நாடகப்பாடல்கள் இசைத்தட்டுக்களாக வெளிவந்து தமிழ்நாட்டின் மூலை முடுக்கு, பட்டிதொட்டி எல்லாம் எதிரொலித்து, புகழ் பரப்பி நின்றன.

நாடகங்களில் நாயகன், நாயகியாக இணைந்து நடித்த எஸ். ஜிக்கும், கே.பி.க்கும் காதல் மலர்ந்தது. கிட்டப்பா ஏற்கனவே திருமணமானவர் என்பது சுந்தராம்பாளுக்குத் தெரியும். என்றாலும் கிட்டப்பா "கடைசிவரை உன்னைக் காப்பாற்றுவேன்" என்று வாக்குறுதி அளித்ததால் அவரைக் மணக்கச் சம்மதித்தார் "ஏழிசை வல்லபி". இவர்களின் காதல் பற்றி அறிந்த கிட்டப்பாவின் சகோதரர் அப்பாதுரை ஐயரும், கே.பி.யின் மாமா மருக்கொழுந்தும் இரகசியமாகக் கலந்து பேசி இருவருக்கும் 1927ம் ஆண்டு மாயவரத்தில் எளியமுறையில் திருமணம் செய்து வைத்தனர்.

இந்த மனமொத்த காதல் தம்பதியருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. ஆனால் என்னே துர்பாக்கியம்! பிறந்த சில நாட்களிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்து விட்டது. இதனால் பெரும் சோகத்திற்குள்ளான தம்பதியர் சிலமாதங்கள் நடிக்காமல் விட்டுவிட்டார்கள். நாடகத் தயாரிப்பாளர்கள், இரசிகர்கள் ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் நடிக்க வந்தார்கள். ஆனால் விதி யாரை விட்டது? உறவினர்களின் சதியினால் எஸ்.ஜி யும் கே.பி யும் பிரிய நேரிட்டது.

இவர்களிருவரும் பிரிய நேரிட்டதற்குப் பிறிதொரு காரணமும் அந்த நாட்களில் கூறப்பட்டது. "கிருஷ்ணலீலா" நாடகத்தில் சுந்தராம்பாள் நடிக்க வேண்டாமென்று கிட்டப்பா கூறியதாகவும் அதை மீறி சுந்தரம்பாள் நடிக்கச் சென்றதாகவும், அதனால் எஸ்.ஜி கோபம் கொண்டதாகவும் அன்றைய ஊடகங்கள் தெரிவித்திருந்தன.

எது எப்படியோ பிரிந்தவர்கள் பிரிந்தவர்களே! மீண்டும் இணையவே இல்லை. சுந்தராம்பாள் எத்தனையோ கடிதங்கள் எழுதிப் பார்த்தார். அத்தனையும் கண்ணீர்க் காவியங்கள்! ம்ஹூம்! கிட்டப்பா மசியவில்லை - ஆனால் கவலையால் கிட்டப்பா மதுப்பழக்கத்திற்கு ஆளானார் - மதுவிற்கு அடிமையான அவர் அதன் உச்சக்கட்டத்திற்குச் சென்று 02.12.1933 அன்று காலமானார். அப்போது வயது இருபத்தேழு - மனைவி சுந்தராம்பாள் வயது இருபத்தைந்து.

கிட்டப்பா இறந்தசெய்தி சுந்தராம்பாளுக்கு தாமதமாகவே தெரிவிக்கப்பட்டது. தகவல் அறிந்ததும் சுந்தராம்பாள் கதறித் துடித்து அழுதுகொண்டு விரைந்தோடினார். ஆனால் பிற்பகல் மூன்று மணிக்கு காலமான கிட்டபாவின் உடலை ஆறு மணிக்கே தகனம் செய்து விட்டார்கள். எனினும் சுந்தராம்பாள் இறந்தவரின் அஸ்தி கலசத்தைப் பெற்று காசிக்குச் சென்று திரிவேணி சங்கமத்தில் கரைத்தார்.

கிட்டப்பா சுந்தராம்பாளைப் பிரிந்தும் அவர் மீது சுந்தரம்பாள் அளவு கடந்த அன்பும். பாசமும் கொண்டிருந்தார். கணவர் இறந்ததும் வெள்ளை ஆடை அணிந்து துறவுக் கோலம் பூண்டார். அத்துடன் நாடகங்களில் நடிக்கவும் மறுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் "இசைப் பேரறிஞர்" சுந்தராம்பாள் பாடல்களைக் கேட்டு தம்மை மெய்மறந்தவர்கள், அன்னார் பாடாமலும், நடிக்காமலும் இருப்பதைக்கண்டு ஆழ்ந்த கவலையடைந்தார்கள்.

காங்கிரஸ் தலைவர் சத்திய மூர்த்தி உட்பட பலரும் கேட்டுக் கொண்டதற்கிணங்க "ஆண்களுடன் சேர்ந்து நடிப்பதில்லை" என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டு "நந்தனார்" நாடகத்தில் நந்தனாராக, ஆண் வேடத்தில் நடித்தார். நாடகம் பிரமாண்டமான வெற்றி பெற்றது.

இக்காலகட்டத்தில் தமிழில் பேசும்படங்கள் வெளிவரத் தொடங்கின. சினிமாவில் நடிக்க அழைப்பு வந்த போது கே. பி. அழைப்புகளை அன்புடன் மறுத்தார். அந்தச் சமயத்தில் வடநாட்டைச் சேர்ந்த அசன்தாஸ் என்ற பெரிய படஅதிபர் "நந்தனார்" நாடக வெற்றியைக் கேள்விப்பட்டு அதனைத் தமிழில் படமாகத் தயாரிக்க விரும்பி, காங்கிரஸ் தலைவர் சத்தியமூர்த்தியையும் அழைத்துக் கொண்டு கே.பி.யின் இல்லத்திற்குச் சென்றார். அப்போது சுந்தராம்பாள் வீட்டில் இருக்கவில்லை. சுந்தராம்பாளின் தாய்மாமன்தான் இருந்தார். விடயத்தை மாமனிடம் அசன்தாஸ் கூறினார். "சுந்தராம்பாள் சினிமாவில் நடிக்கமாட்டார்" - இது தாய்மாமன்

சுந்தராம்பாள் "நந்தனார்" நாடகத்தில் நடித்தாரே! அதே பாத்திரத்தில் சினிமாவில் நடிப்பதில் தவறேதுமில்லையே!" - இது அசன்தாஸ்.

பட அதிபரை விரட்ட என்ன வழி என்று யோசித்து "ஒரு இலட்சம் தரத்தயாரா?" என்று போடு போட்டார் தாய்மாமன் - பெரிய தொகையைக் கூறினால் பட அதிபர் ஓடி விடுவார் என்று தாய்மாமன் யோசித்தார். (ரூபா ஒரு இலட்சம் என்பது அக்காலகட்டத்தில் மிகப் பெரிய தொகை - ஒரு படமே தயாரித்து விடலாம்)

ஆனால் மாமனுக்கு ஏமாற்றம்! அசன்தாஸ் அசரவில்லை; "ஒரு இலட்சம் தானே! இதோ அட்வான்ஸ்" என ரூபா இருபத்தையாயிரத்துக்கு ஒரு காசோலையைக் கொடுத்தார். சத்திய மூர்த்தியும், அசன்தாசும் சென்ற சொற்ப நேரத்தில் சுந்தராம்பாள் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தார். மாமன் நடந்ததையெல்லாம் கூற முதலில் மறுத்த கே. பி. அட்வான்ஸ் வாங்கியதாலும், நாடகத்தில் நடித்த அதே வேடத்தில் நடிப்பதாலும் சம்மதம் தெரிவித்து நடித்தார். சங்கீத வித்துவான் மகாராஜபுரம் விஸ்வநாத ஐயர் வேதியராக நடித்தார். அவரின் சம்பளம் ஆக மூவாயிரம் மட்டுமே! படத்தில் மொத்தம் 41 பாடல்கள், அவற்றில் சுந்தராம்பாள் பாடியவை பத்தொன்பது! அத்தனையும் இனிமை!

அடுத்து கே.பி.எஸ் நடித்த திரைப்படம் மணிமேகலை - வெற்றிகரமாக ஓடிய இப்படத்தில் சுந்தராம்பாள் பாடிய "சிறைச்சாலை என்ன செய்யும்?" பாடல் மிகப் பிரபல்யமாகி, பின்னர் காங்கிரஸ் மேடைகளில் எல்லாம் பாடப்பட்டது.

பின்னர் ஜெமினி அதிபர் எஸ். எஸ். வாசன் முப்பது இலட்சம் ரூபா செலவில் பிரமாண்டமாகத் தயாரித்த "அவ்வையார்" படத்தில் ஔவையாராகவே வாழ்ந்து காட்டினார் 'பத்மபூஷண்' கே.பி. சுந்தரம்பாள். சுருங்கச்சொன்னால் கறுப்பு - வெள்ளை நிறத்தில் தயாரான மிகச் சிறந்த பத்து படங்களை இன்று தேர்ந்தெடுத்தால் அதில் 'அவ்வையாருக்கு' நிச்சயம் இடமுண்டு என்று அடித்துச் சொல்லலாம்!

பிறகு கலைஞர் மு. கருணாநிதி தயாரித்த 'பூம்புகார்' படத்தில் (1964) கவுந்தி அடிகளாகவும், ஏ. பி. நாகராஜன் தயாரித்த 'திருவிளையாடல்' படத்தில் (1965) ஔவையாராகவும் நடித்துப் புகழ்பெற்றார் - திருவிளையாடல் பெரிய வெற்றிப்படம். அந்த படத்தின் வெற்றிக்கு 'ஏழிசை வல்லபி'யின் பாடல்கள் துணைநின்றன என்றால் அது மிகையில்லை!

தொடர்ந்து, 'மகாகவி காளிதாஸ்' (1966), 'கந்தன் கருணை' (1867), 'உயிர் மேல் ஆசை' (1967), எம்.எம்.ஏ.சின்னப்பதேவரின் 'துணைவன்' (1969), 'காரைக்கால் அம்மையார்' (1973), 'திருமலைத்தெய்வம்' (1973) ஆகிய படங்களில் நடித்தார்.

சுந்தராம்பாள் நாடகமேடைகளிலும், சினிமாப் படங்களிலும், தனியாகவும் பாடிய இருநூறுக்கு மேற்பட்ட பாடல்கள் இசைத் தட்டுகளாக வெளிவந்துள்ளன. சங்கரதாஸ் சுவாமிகள் இயற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஞானப்பழத்தைப் பிழிந்து..." என்ற பாடலையும், "தனித்திருந்து வாழும் தவமணியே..." என்ற பாடலையும் காலத்தால் அழியாவண்ணம் அற்புதமாகப் பாடியுள்ளார்.

தேசியவாதியான அவர் பிரதமர் ஜவகர்லால் நேருவின், தந்தை மோதிலால் நேரு மறைந்த போது. "பண்டித மோதிலால் நேருவைப் பறிகொடுத்தோம்!" என்ற பாடலையும் அன்னை கஸ்தூரி பாய் இறந்த போது "உன்னை மறந்திடப்போமா?" என்ற பாடலையும் உத்தமர் காந்தி காலமானபோது, "உத்தமராம் காந்தியை....." பாடலையும் தனி இசைத்தட்டாக உள்ளம் உருகப்பாடி வெளியிட்டார்.

1937ம் ஆண்டு மகாத்மா காந்தி ஈரோடு வட்டாரத்தில் சுற்றுப்பயணம் செய்த போது தமிழக காங்கிரஸ் தலைவர் சத்தியமூர்த்தியின் ஏற்பாட்டில் கொடுமுடியில் உள்ள சுந்தராம்பாள் வீட்டில் உணவருந்தினார். அப்போது உலகம் போற்றும் காந்தி மகானுக்கு ஒரு தங்கத்தட்டில் உணவு பரிமாறினார் இசையரசி. கே.பி.எஸ். "எனக்கு உணவுமட்டும் தானா? தங்கத்தட்டு கிடையாதா?" என நகைச்சுவையாக சிரித்தபடி கேட்டார் காந்தி. விருந்து முடிந்ததும் தங்கத்தட்டை காந்தியிடம் அன்புடன் வழங்கினார் கே.பி.எஸ். காந்தி அதை அங்கேயே ஏலத்தில் விட்டு கிடைத்த பணத்தை கட்சி நிதியில் சேர்த்துவிட்டார். காந்தி மகான் இரண்டு பேருக்கும் பூரண திருப்தி!

1958ம் ஆண்டு கர்மவீரர் காமராஜர் முதலமைச்சராக இருந்த போது சுந்தராம்பாள் தமிழக மேல்சபை உறுப்பினராக நியமிக்கப் பட்டார்.

அமரர் சுந்தராம்பாள் வாழும் காலத்திலேயே பெற்ற விருதுகள்:
மத்திய அரசு - "பத்மபூஷண்" விருது
தர்மபுரம் ஆதீனம் - "ஏழிசை வல்லபி" பட்டம்
தமிழிசைச் சங்கம் - "இசைப் பேரறிஞர்" பட்டம்

**இணுவையூர் கலாபூஷணம்**
**ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தி எமக்கு எதற்கு!

எமது வாழ்க்கைக்கு பக்தி அவசியம் என்று பெரியோர்கள் சொல்லியுள்ளார்கள். சாஸ்த்திரங்களும் கூறியுள்ளன. ஆச்சாரிய சுவாமிகள் என்ன சொல்கின்றார் என்று பாருங்கள்! "தெய்வ பக்தி குரு பக்தி, இரண்டும் எமது வாழ்க்கைக்கு அவசியம்" என்பது அவரது உபதேசமாகும். தெய்வ பக்தியே ஈஸ்வர பக்தி எனப்படுகின்றது. எந்த மதத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். எல்லா மதங்களுமே மனித வாழ்க்கைக்குப் பக்தி அவசியம் என்பதை வலியுறுத்துகின்றன. எமக்கு மேலே ஒருவன் உள்ளான். அவனிடம் நாம் புனிதமான, உண்மையான பக்தி வைக்க வேண்டும். மெய் அன்பு கொள்ள வேண்டும். அந்த இறைவன் யார்? அவனே எம்மை எல்லாம் படைத்தவன், எம்மை எல்லாம் காப்பவன் என்பதை பெரும்பாலான மதங்கள் ஒத்துக் கொள்ளத்தான் செய்கின்றன.

ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு காரணம் இருக்கிற தல்லவா! அதுபோலவே தான் இறைவன் உண்டு என்ற முடிவும் எடுக்கப்படுகின்றது. ஒரு புத்தகம் இருக்கிறது; அது யாரோ ஒருவரால் எழுதி, அச்சிடப்பட்டிருக்க வேண்டும். ஒரு ஆலயம் உள்ளது; அதனை ஒரு கொத்தனார் கட்டியிருக்க வேண்டும். இந்த உண்மையை எவரும் மறுக்க முடியாது.

அது போன்று தான், இந்தப் பிரபஞ்சத்தைப் பாருங்கள்....! இந்த பரந்த உலகைப் பாருங்கள்.....! இங்கே இடம் பெறும் காரியங்கள் தான் எத்தனை! எத்தனை! அத்தனைக்கும் காரணமாக ஒருத்தன் இருக்கத்தான் வேண்டும். அவனே ஆண்டவன், இறைவன், ஈஸ்வரன், எல்லாம் வல்லவன். இறைவன் இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்ததோடு மாத்திரம் விட்டானா! இல்லையே! எமது சரீரம், நாமாகப் பண்ணிக் கொண்டதல்லவே! எவனோ ஒருவன் அதனை சிருஷ்டித்துள்ளான். அவனே இறைவன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சரீரம்; அதனைப் புஷ்டியாக வைத்துக் கொள்ள பல்வகை ஆகாரங்கள்; அவற்றை ஜீரணிக்க எமக்கு சக்தி - இவ்வாறே காற்று. நிலம், நீர், வெப்பம் இவற்றை எல்லாம் சிருஷ்டித்த இறைவனுக்கு நாம் பக்தி செய்ய வேண்டாமா? பல மணி நேரமல்ல. சில நிமிட நேரம் தன்னும் இப்பிரபஞ்சத்தை எம்மைக் கேட்டுக் கொண்டா ஆண்டவன் படைத்தான்! இல்லையே! தானே படைத்தான்! தானே இரட்சிக்கின்றான். அவன் பெரியவன். அவனது இயல்புகளைச் சற்று பார்ப்போமா!? இவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ள வேதங்கள், பிரம்மஸூத்திரம் ஆகியவை கூறியுள்ளதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

**பக்தியை நாம் இறைக்காகவே செய்கின்றோம்.....!**

எத்தனை சுகங்கள், எத்தனை துன்பங்கள் எல்லாம் ஒவ்வொருவர் வாழ்விலும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. துக்கம் ஏற்படுவதற்கு உரிய செயல்களை நாம் இப்பிறவியில் செய்யாமல் இருந்த போதும், துக்கம் எம் வாழ்வில் வரத்தான் செய்கிறது. அது பூர்வ ஜன்ம பலன் என்று தான் வைத்துக் கொண்டாலும் அவரவரது கன்ம பலனை அவரவரிடம் சேர்ப்பிப்பவன் பேரறிவும் சர்வ சக்தியும் கொண்ட இறைவனே என்பதை நாம் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும்.

கட்புலனுக்கு அப்பாற்பட்ட சக்தி இறைவன். புலன் அறிவு மூலம், நாம் இறை உணர்வைப் பெற்றுக் கொள்ளும் வகையில், பக்தி எமக்கு அவசியப்படுகிறது. இறையை உணர்ந்து விளங்கிக் கொண்டோமானால், எம்முள் உள்ள ஆன்மீக உணர்ச்சி, மலர்ந்து விடும். இதற்கு எமக்கு பக்தி வேண்டும்.

மேலை நாடுகளில் சமய உணர்வு, வாழ்க்கையின் பல அம்சங்களில் ஒன்று எனக் கருதப்படுகின்றது. எமது மெய்யடியார்களும், ஞானிகளும் அருளாளர்களும் சமய பக்தியும் சமய உணர்வுமே வாழ்வின் முழுமை என உபதேசித்துள்ளனர்.

மக்கள் பல வழிகளில் இறைவனுக்கு பக்தி செய்கின்றனர். வழிபாடு செய்கின்றனர். இறைவன் ஒருவனே என்பது தான் இந்து மதத்தின் அடிப்படைக் கொள்கையாக இருந்து வந்துள்ளது. பல நிறப் பசுக்கள், வெண்மையான ஒரே விதமான பாலையே தருவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல் பல வழிகளும் வழிபாட்டு முறைகளும் எம்மை இறைவனிடம் அழைத்துச் செல்கின்றன. இது உபநிடதம் கூறும் கருத்து.

"மனிதர்கள் எம்முறையில் என்னை அணுகினும் அம்முறையில் அவர்களை நான் ஏற்கிறேன்" ஆதிய ஆசாரியார், இராமனுஜர், மத்துவர் எல்லோருமே ஈஸ்வரன் பிரபஞ்ச சிருஷ்டிக்கெல்லாம் கர்த்தா என்று கூறியுள்ளனர். இதனால் தான் வேதத்திற்குப் புறம்பான மதங்களும் ஈஸ்வரனைக் "கர்த்தா" என்கின்றனவோ!

சிருஷ்டி மாத்திரம் இறைவனின் வேலை அல்ல. எம்மை எமது காரியங்களை, கணக்கு பண்ணி அவற்றுக்குத் தகுந்தபடி கர்ம பலனைக் கொடுப்பவனும் அவனே தான். நாம் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் நல்லதைச் செய்ய முற்படுகிறோம். சில சமயங்களில் தப்பான காரியங்களையும் செய்து விடுகின்றோம். இவற்றை கணக்குப் பண்ணி, அதற்குத் தக்க கன்ம பலன்களை எமக்கு அளிப்பவன் அந்த ஆண்டவனே.

உலகத்தைச் சிருஷ்டித்தவன் அவன். அவன் தானே உலகத்தையும் உயிரினங்களையும் காப்பாற்றியாக வேண்டும். மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றித் தானே ஆக வேண்டும். அதற்கு நாம் ஏன் பக்தி செய்ய வேண்டும் என்று சந்தேகம் கொள்பவர்களுக்கும் எம்மிடையே இருக்கத் தான் செய்கின்றார்கள். சிருஷ்டித்தான் இரட்சித்தான் என்றிருந்து விடலாமே, நாம் என்ற எண்ணம் இவர்களது மனதில் விருப்பு. வெறுப்பு இல்லாத இறைவனுக்கு எமது பக்தி அவசியமா? என்கிறார்கள். ஆனால், இது இவர்கள் போடும் மேலோட்டமான, சோம்பேறித்தனமான, அர்த்தமற்ற தப்புக் கணக்கு. எது எவ்வாறிருப்பினும், எமக்கு மேலிருக்கும் அந்த பரம்பொருளையாம் அடைந்தே ஆக வேண்டும். அதற்கான மார்க்கமே பக்தி. எனவே, பக்தி செய்வோம். பலனைப் பெறுவோம். செய்வோமா?

**ஆக்கம் :**

**திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு**

பழைய மாணவி, யாழ்/இந்து மகளிர் கல்லூரி

முன்னாள் அதிபர், யாழ்/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் பெருமை

1. அன்பு என்பது தெய்வமானது.

2. அன்பு என்பது இன்பமானது.

3. மதத்தின் மீது வைத்த அன்பு பக்தியானது.

4. மனிதன் மீது வைத்த அன்பு பாசமானது.

5. இதயம் மீது வைத்த அன்பு உண்மையானது.

6. ஏழை மீது வைத்த அன்பு கருணையானது.

7. அன்பு என்னும் பொருளை எந்த உலகில் வாங்கலாம்.

8. நல்ல அன்னை தந்தை பிள்ளை வாழும் மனையில் வாங்கலாம்.

9. புனிதமான அன்பு சுயநலமற்றது. அகங்காரமற்றது ஆனந்தம் நிரம்பியது. இத்தகைய அன்பை ஒருவர் அன்பினால் மட்டும்தான் உணர முடியும்.

10. நிரந்தரமான அன்பு இதயத்திலிருந்து எழுவது. இந்த அன்பு நிரந்தரமானது. இதுவே கடவுளுக்கு அர்ப்பணிக்க வேண்டியது.

11. மனிதரிடையே இதயத்தில் இருந்து முழுமையான அன்பு வெளிப்படுவதில்லை. ஏனெனில் இதயம் வரண்டுவிட்டது. உலகிலுள்ள பற்றுக்களை அகற்றினால் உண்மையான அன்பு உள் நுழைந்து நிறைந்து பரவுகின்றது.

12. ஆண்டாள் கண்ணன் மீது வைத்த அன்பு காரணமாக ஆண்டாள் திருப்பாவை தோன்றலாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. சுவாமி விவேகானந்தர் இராமகிருஷ்ணர் பரமஹம்சர் மீது வைத்த அன்பின் காரணமாக துறவறத்தை மேற்கொண்டார்.

14. ஏழை மக்கள் மீது கொண்ட அன்பினால் சிறுவயதிலேயே தன் வாழ்க்கையத் துறந்து மக்களுக்கு அன்னை திரேசா சேவை செய்ததினால் நாடு அவரை அன்னையாகப் போற்றியது.

15. கண்ணன் குசேலர் மீது கொண்ட அன்பினால் ஒரு பிடி அவலை ஏற்று அவரின் தரித்திரத்தை போக்கினான்.

16. அன்பினால்தான் அன்பை பெறமுடியும்.

17. அன்பினால் உலகை வலம் வரலாம்.

18. அன்பால் எதையும் சாதிக்கலாம்.

19. சாவித்திரி சத்தியவான் மீது கொண்ட அன்பால் எமனுடன் போராடி உயிரை மீட்டாள்.

20. நக்கீரர் 99 முனிவர்கள் மீது கொண்ட அன்பினால் திருமுருகாற்றுப் படை பாடி அம்முனிவர்களைக் காப்பாற்றினார்.

21. மகாத்மா காந்தி இந்திய மக்கள் மீது வைத்த அன்பினால் தன் உயிரை நீத்தார்.

22. அசோகச் சக்கரவர்த்தி தனது நாட்டு மக்களை அன்பினால் ஆட்சி புரிந்து மக்களை நல்வழிப்படுத்தினார்.

23. குகன் வேடர் குலத்து தலைவன். கல்வி ஆச்சாரம் முதலிய எந்த ஒன்றிலும் உயர்வு பெற்றிராத குகனை இராமர் தன் அன்பினால் தம்பி என்று கூறித் தழுவிக் கொண்டார்.

24. சிலபேர் அன்பின் தன்மையால் உதவி செய்வதாக நினைத்து ஏதாவது செய்வார்கள். அதுவே சிலருக்கு பெரிய உபத்திரமாக போய்விடும். சிலநேரம் அவர்கள் மீது கோபமும் கொள்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது அவர்கள் அன்பின் நிமித்தம் செய்தார்கள் என்று நினைத்தால் கோபம் வராது.

25. அதிகாரத்தினாலோ பணத்தினாலோ பதவியினாலோ, எந்த செயலினாலோ அன்பை வாங்க முடியாது.

26. அன்பு கொடுக்க கொடுக்கக் குறையாது அது "அட்சய பாத்திரம்" போன்று மிளிரும் தம்மையுடையது.

27. மனித இனத்தை அன்பென்னும் அளப்பெரிய சக்தியால் இணைத்து வழி நடத்தலாம்.

28. கடவுள் மனிதனுக்குள் உறைந்து இருக்கிறார் அதை அன்பு என்னும் பக்தியால் தட்டி எழுப்பலாம்.

29. எல்லோரிடத்திலும் அன்பு வை.

30. அன்போடு எல்லோருக்கும் சேவை செய்.

31. இராமர் ஆஞ்சநேயரைச் சந்திக்கும் போது தனது மனதில் நினைத்தாராம், ஆஞ்சநேயரின் அன்பினால் இவனின் புகழ் ஒரு காலத்தில் உலகெங்கும் பரவும் என்று. ஆஞ்சநேயரின் அன்பின் தன்மையால் அவர் புகழ் இன்று உலகெங்கும் பரவியுள்ளது.

32. மணிமேகலை மக்கள் மீது கொண்ட அன்பினால் இளம் வயதில் துறவறத்தை மேற்கொண்டு ஊர் ஊராகச் சென்று அட்சய பாத்திரத்தின் மூலம் வறியவர்களுக்கு உணவளித்து சேவை செய்தாள்.

33. கண்ணகி கோவலன் மீது வைத்த அன்பினால் அவன் மாதவியை நாடிச் சென்று திரும்பி வந்த போதிலும் அவனை ஏற்றுக்கொண்டாள். இது அவன் மீது கொண்ட அன்பின் காரணமாக.

34. பேச்சிவல் பாரதியார் உள்ளன்போடு ஆறுமுகநாவலரை நேசித்தபடியினால் அவர் "பைபிளை" தமிழில் மொழி பெயர்க்க சம்மதித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. இறைவன் எம்மீது செலுத்தும் அன்பு கருணை, நாம் அவன் மேல் செலுத்தும் அன்பு பக்தி.

36. திருஞானசம்பந்தர் இறைவன் மீது கொண்ட அன்பினால் அவருக்கு உமையம்மையின் திருமுலைப்பால் கிடைத்தது.

37. சுந்தரர் இறைவனின் அன்பினால் கண்டுண்டபடியினால் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டார்.

38. மாணிக்கவாசகர் இறைவன்பால் கொண்ட அன்பினால் திருவாசகம் பாடினார்.

39. அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம்லிங்கன் படைவீரன் மீது கொண்ட அன்பின் நிமிர்த்தம் வீரனின் தாய்க்கு வீரன் சொல்லச் சொல்ல கடிதம் எழுதினார்.

40. ஆறுமுக நாவலர் மக்கள் மீது கொண்ட அன்பினால் தனது உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்தார்.

41. இராமகிருஷ்ணபரமஹம்சர் தம் மனைவி சாரதாதேவி மீது வைத்த அன்பினால் அவரை காளியாக நினைத்து வணங்கினார்.

42. அன்பினால் கடவுளைக் கண்டவர்கள் அற்புதம் பல ஆற்றியவர்கள்.

43. மேய்ப்பன் இல்லாத ஆநிரைகளைக் கண்ட திருமூலர் அதன் மீது அன்பு கொண்டதால் தனது உடலையே தியாகம் செய்தார்.

44. ஆன்மீகம் துறவறம் மேற்கொள் என்று கூறவில்லை. அது அன்பு கலந்த பக்தியை கூறுகிறது.

45. அன்பின் ஒரு வடிவம்தான் பக்தி.

46. அன்பின் வழி நடந்தவர்கள் தோற்றுப் போனதாக சரித்திரம் இல்லை.

47. அன்புக்கு சக்தி அதிகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. அன்பில்லா உயிர் வாடி வதங்கிவிடும்.

49. பாரிவள்ளல் தேரில் பவனி வந்த போது வழியில் முல்லைக்கொடிபடர கொழு கொம்பு இல்லாமல் இருப்பதைப் பார்த்து அதன் மீது கொண்ட அன்பின் விளைவால் தன் விலைமதிக்கமுடியாத தேரை முல்லைக்கொடி படர்வதற்கு விட்டுச் சென்றார்.

50. சிபிச் சக்கரவர்த்தி புறா மீது வைத்த அன்பினால் வேடனிடம் தன் உடலிருந்து சதையைக் கொடுத்து புறாவையை மீட்டார்.

51. அன்பு செலுத்துவதில் உள்ள ஆனந்தம் வேறொன்றிலும் இல்லை.

52. அன்பு உள்ள இடமே ஆண்டவன் உறையும் இடம்.

53. அன்பு காட்ட பணமோ, உயர்வு தாழ்வோ தேவையில்லை. மனம்தான் தேவை.

54. ஒருவர் மீது அன்பு அதிகமானால், அறியாமையினால் சில தவறுகள் நேரும். அவற்றை உணர்ந்து மன்னிப்பு கேட்பவன் மனிதன் அதை உணர்ந்து மன்னிப்பவன் கடவுள்.

55. அன்பின் வழியது உயர்நிலை எனவே அன்பில்லாதவன் அவன் மனிதனே அல்ல.

56. இராமலிங்க அடிகளார் வாடிய பயிர் கண்டு அதன் மீது அன்புள்ளம் கொண்டு வாடியவர் வள்ளலார் எனப் போற்றப்படுகிறார்.

57. பன்றிக் குட்டிகள் தாயைக் காணாது பசியால் தத்தளித்த போது இறைவன் அவர்கள் மீது அன்பு கொண்டதனால் தாய்ப்பன்றியாக மாறி அவர்களின் பசியை தீர்த்தார்.

58. நாம் ஒருவரை எம்பால் ஈர்த்தெடுக்க ஒரே வழி அன்பு தான்.

59. இறைவனிடம் தன்னலமற்ற அன்போடு பக்தியை செலுத்தினால் எல்லாம் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60. அன்பால் அகிலத்தை வென்றிடலாம்.

61. யாருமற்ற மூதாட்டி (செம்மணச் செல்வி) அணை கட்ட முடியாமல் அன்பால் இறைவனை வேண்டிய போது கடவுளே கூலியாளாக வரவில்லையா?

62. உனது அந்தஸ்து அதிகாரம், பதவி, அழகு, அகங்காரம், திமிர் எல்லாம் அன்புக்கு முன்னால் ஒரு தூசாகிவிடும்.

63. இரக்கம், ஈகை, ஜீவகாருண்யம், புரிந்துணர்வு உதவி செய்தல் யாவும் அன்பின் வடிவங்களே.

64. பரமாத்மா ஒன்று இரண்டற்றது அதுபோல. அன்பு ஒன்றுதான்.

65. அன்பு என்று சொல்லும் போது மனதுக்கு இதமாக இருக்கும்.

66. அன்பே சிவம் என்று நினை.

67. 'அன்பிலார் எல்லாம் தமக்குரியார்
அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு'
என்பதற்கு அமைவாக எல்லோரிடமும் அன்பு செய்வோம் ஆனந்தம் அடைவோம் அகிலத்தை வெல்வோம்.

1. தினசரி தியானம் செய்
2. சமூக சேவைகளில் பங்கு கொள்
3. எல்லோரிடமும் அன்பாகவும், மிருதுவாகவும் பேசு.
4. பிறரைப்பற்றி குறை கூறுதல் தவிர்.
5. ஆசைக்கு வரம்பு வைத்தல்.

மனிதன் + ஆசை = மிருகம்
மனிதன் - ஆசை = கடவுள்

ஆக்கம் : **செல்வி வ. நாகேஸ்வரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

SMART SMILE

# DR. K. SRIPATHMANATHAN

BDS, DGDP. Dip HRA

***DENTAL SURGEON***
***REGD NO. 960***

*No 39A, Mary's Road,*
*Marine Drive, Colombo - 04*

*077 359 5790*

*sripathan@gmail.com*

**CONSULTATION BY APPOINTMENT**

*With Best Compliments from*

*HK Travels & Tours*




*Airport Pick & Drop
*Island wide Tours (Inbound Tours)
*City Tours
*Wedding Hiring
*Guest Houses

Fully Furnished Apartment and Houses for rent in Colombo 06,
Day, week & monthly purposes
(Convenient to Super markets, banks and hospitals)

For reservations - 0777173121 / 0777712095 / 0777431222





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

UJ

# Udayaa Jewellers

303, Galle Road, Wellawatte, Colombo 06. Sri Lanka

Tel: +94 112554933

*With Best Compliments from*

AJ Arrujuna

# Arrujuna Jewellery

අරුජුණා ජවෙලරි　　　அருஜுணா ஜுவலரி

30, Galle Road, Dehiwela, Sri Lanka.

Tel : 2761220



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்/ இந்து மகளிர் கல்லூரி வளாகத்தில் அமைந்த இராஜவரோதய
பிள்ளையார் ஆலயம்.



எமது மன்றத் தலைவி கௌரவிக்கப்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சென்ற "யாழ் நாதம்" வெளியீட்டில், மேடையில் மன்ற முக்கியஸ்தர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

# ARRUJINA JEWELLERY

*Collection of Fine Genuine Jewellery*

අරුජිණා ජවෙලරි

அருஜிணா ஜுவலரி

36, Galle Road, Dehiwela, Sri Lanka.
Tel : 2716028, 4563499, Fax : 2733503
Email : arrujina@sol.lk

*With Best Compliments from*







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமொழிகளில் உடல் உறுப்புகள்

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

ஆழமறியாமல் காலை விடாதே.

பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்.

கூருக்கு எதிரே கால் நீட்டாதே.

தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்.

நடந்த கால் சீதேவி.

பாம்பின் கால் பாம்பறியும்.

காலைச் சுற்றிய பாம்பு கடிக்காமல் விடாது.

வெறுங்கை முழம் போடுமா?

எச்சில் கையால் காக்கை விரட்டாதவன் பிச்சை சொடுப்பானா?

எறும்பும் தன் கையால் எண் சாண்

கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையா?

கையில் வெண்ணெய் இருக்க நெய்க்கு அலையாதே

குட்டுப்பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்படு.

மேழி பிடிக்கும் கை வேல் வேந்தா் நோக்கும் கை.

ஊரார் வீட்டு நெய்யே தன் பெண்டாட்டி கையே

தன் கையே தனக்கு உதவி

கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை.

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்

உலை வாயை மூடலாம் ஊர் வாயை மூடலாமா?

நெருப்பென்று சொன்னால் வாய் வெந்து விடுமா?

பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்.

வெறும் வாயை மெல்கிறவளுக்கு அவல் கிடைத்தாற்போல்

அடி நாக்கில் நஞ்சும் நுனி நாக்கில் அமிர்தமும்

நாக்கில் நஞ்சும் நுனி நாக்கில் தீமையும்.

நரம்பில்லா நாக்கு திரும்பிய பக்கம் பேசும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலும் வேலும் பல்லுக்குறுதி
சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்
பல்லுப் போனால் சொல்லுப் போச்சு
தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்.
அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பேய்.
ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு
கண் கெட்ட பின்பு சூரிய நமஸ்காரமா?
காமாலைக கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சள்
தூரத்துப்பச்சை கண்ணுக்கு குளிர்ச்சி
மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்
ஐந்து விரல்களும் ஒன்று போலிரா.
விரலுக்குத் தகுந்த வீக்கம்
கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை
சாகத் துணிந்தவனுக்கு சமுத்திரமும் முழங்கால் மட்டம்
தா்மம் தலை காக்கும்
எண்சாண் உடம்புக்கு தலையே பிரதானம்
சோழியன் குடுமி சும்மா ஆடாது.

*நன்றி - கண்ணம்மா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சையள்ளும் முத்தமிழ் காப்பியம் சிலப்பதிகாரம்

குடிமக்களுள் ஒருவனைத் தலைவனாக்கிக் காப்பியம் படைத்த பெருமை இளங்கோவடிகளையே சாரும். இவர் தமிழுலகிற்கு அளித்த முத்தமிழ் காப்பியமே நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம். சங்க இலக்கியங்கள் தனித்தனிச் செய்யுள்களாக அமைந்தவை. தனிதனிச் செய்யுள்களின் தொடர்நிலைச் செய்யுள்களின் மலர்ச்சியே சிலப்பதிகாரம்.

தமிழ் இலக்கியத்தின் முதற் காப்பியம். இதனைக் காப்பு + இயம் எனப் பிரித்து கருதுவர். காப்பியம் எனும் சொல் எஸ் வையாபுரிப்பிள்ளை ஆரம்ப காலந்தொட்டே வழக்கில் இருந்தது என்பர். செந்தமிழ்க் காப்பியமாக திகழும் சிலப்பதிகாரம் இவ்விருவேறு பற்றினை அழுத்தமான கருத்துடன் காட்டுகிறது. தமிழ் பற்றும் தமிழ் நாட்டுப் பற்றும் இதில் அழகாகத் தோன்றுவதுடன் ஒவ்வொரு தமிழ் அரசின் பற்றும் பண்பாடும் மிளிர்கின்றன.

சிலப்பதிகாரம் மூன்று காண்டங்களையும், முப்பது காதைகளையும் கொண்டது. புகார் காண்டம் 10 காதைகளையும், மதுரைக் காண்டம் 13 காதைகளையும். வஞ்சிக் காண்டம் ஏழு காதைகளையும் கொண்டுள்ளன.

காப்பியத்தின் தொடக்கம் மங்கல மரபிற்கமைய "திங்களைப் போற்றதும் திங்களைப் போற்றதும்" என இயற்கையுடன் ஆரம்பமாகி, மன்னனையும் புகழ்கிறது. இயற்கையின் புகழில் அரசனைக் காணும் உயர் பண்பைக் காண முடிகிறது. பல்வேறு மொழிகளில் தலைவன் தலைவி பெயரில் அமைய அடிகளார் கதையின் உயிரோட்டம் திருப்புமுனையாகவுள்ள சிலம்பை முன்னிறுத்திப் பாடியமை ஒரு புரட்சியென்றே கருதலாம். இத்தகைய புதிய சிந்தனையோட்டம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையாவும் அவரது உளத்தில் ஏற்பட்டமையால், புதிய காப்பிய மரபினை முதன் முதலில் தமிழ் இலக்கியத்திற்கு தந்துள்ளார். பெருங்காப்பியம் அறம், பொருள், இன்பம் வீடுபேறு இவை நான்கையும் குறிப்பன. இவற்றில் ஒரு பொருள் குறையுமாயின் அது சிறுகாப்பியமெனப்படும்.

சிலம்பு தமிழரின் பாரம்பரிய தனிப்பெரும் செல்வம். இதில் நெஞ்சினையள்ளும் கதாபாத்திரங்கள் உலாவுகின்றனர். இசை உள்ளத்தினை இனிதாக்குகின்றது; சடத்துகள் நிகழ்கின்றன; குரவைகள் ஒலிக்கின்றன; பண்கள் யாவும் தவழ்ந்து வருகின்றன. அறநெறி குழைத்து அறவொழுக்கங்கள் பதிய வைக்கப்படுகின்றன. தமிழினத்தின் உன்னத வாழ்வு, தமிழர்களது பேராண்மை, கொடைப்பண்பு, வரலாற்று தகவல்கள், வாழ்க்கை உண்மையியல் தத்துவங்கள், வாழ்வியல் சிக்கல்கள் யாவும் பொதிந்துள்ளன. மூவேந்தர்களின் நாட்டுவளம், அரசவாண்மை, அவர்களது சிறப்பு முத்தமிழின் வளம் யாவும் சிலம்பிலே கண்டு சுவைத்து இரசித்து இன்புறலாம்.

சிலம்பு தமிழன்னையின் காற்சிலம்பு - காலிற்குரிய அணி கலன் கூறும் முப்பெரும் உண்மைகள் :-
"அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவதூஉம்
உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏற்றலும்
ஊழ்வினை உருத்துவந் தூட்டு என்பதூஉம் - ஆகும்.

சிலப்பதிகாரத்தினை இளங்கோவடிகள் சாத்தனார் கேட்க அரங்கேற்றினார் என்பதனை,

"உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்
உரைசால் அடிகள் அருள மதுரைக்
கூல வாணிகனன் சாத்தன் கேட்டனன்

எனும் வரிகள் கூறுகின்றன. இதற்கு அரிதற்கரிய பெரும் உரையினை பகர்ந்தவர் அடியார்க்கு நல்லார் இதில் மூன்று நாடுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று பெண்கள் முக்கிய இடம் பெறுகின்றனர். கண்ணகி சோழ நாட்டில் பிறந்து, கணவனுக்காகப் பாண்டியமன்னிடம் வாதிட்டு சேர நாட்டில் சிலையானாள்.

இக்காப்பியக் கதை கோவலன் கண்ணகி திருமணத்தில் ஆரம்பிக்கிறது. கோவலன் மாதவியின் நடனத்தால் மையல் கொண்டு. கண்ணகியை விடுத்து, மாதவியின் பால் ஈர்க்கப்பட்டு, மணிமேகலையை மகளாகப் பெற்றான். பல ஆண்டுகட்கு பின்னர், இந்திர விழாவில் கானல் வரிபாடும் நிலையில் ஊழ்வினை காரணமாக மாயத்தாள் மாதவியை அவளின்றின்றும் நீங்கினான். கோவலன் பின்னர் கண்ணகியிடம் தஞ்சமடைந்தான். கோவலனை சோழ நாட்டில் வாழ்வதை விட்டு கவுந்தியடிகள் துணையுடன் கண்ணகியுடன் மதுரை நகரை அடைந்தான். மாதரியிடம் கண்ணகியை அடைக்கலமாக விட்டு கண்ணகியின் சிலம்பொன்றினை பொருள் வேண்டி மதுரை வீதியில் பொற் கொல்லரிடம் சிலம்பினை விற்கச் சென்றான். பாண்டிமாதேவியின் சிலம்பினை எடுத்தவன் எனக் குற்றம் சுமத்தப்பட்டான். பாண்டிய மன்னர் "கோவலனை கொன்று வா" என கட்டளை இட்டனன். கொலைக்களத்தில் கோவலன் கொல்லப்பட்டான். சீற்றம் கொண்ட கண்ணகி தனது இடதுகால் சிலம்புடன் அரண்மனைக்கு சென்று அரசன் முன்னிலையில் தனது கணவன் "கள்வன் அல்லன்" என்பதனை தனது சிலம்பில் உளது மாணிக்ககறிகள் என்பதனை நிருபித்தாள். இதனை பார்த்த மன்னன் "தான் குற்றம் செய்தேன்" என மடிந்தான். அரசி கோப்பெருந்தேவியும் உயிர்நீத்தாள்.

சினம் அடங்காத கண்ணகி மதுரை மாநகரை அக்கினியில் சமர்பணமாக்கிவிட்டு வஞ்சி மாநகரினை அடைந்தாள். அங்குள்ள மலைவாசிகள் காண விமானத்தில் விண்ணுலகினை அடைந்தாள். இதுதான் சிலப்பதிகார காப்பியம் கூறும் கண்ணகி கோவலன் கதையாகும்.

சேரன் செங்குட்டுவன் மலைப்பகுதிக்கு வந்த பொழுது குறவர்கள் கண்ணகி கோவலனுடன் விண்ணகம் சென்ற காட்சியினைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினர். மன்னனுக்கு தண்டமிழ் ஆசான் சாத்தனார் அவருக்கு கோவலன் கண்ணகி வரலாற்றினைக் கூறினார். இதைக் கேட்ட சேரன் செங்குட்டுவனின் தம்பி இளங்கோ அடிகள் முப்பெரும் உண்மைகளை கூறும் இக்கதையினை காப்பியமாக்கும் தன் விருப்பத்தினை சாத்தனாரிடம் கூறினர். அவரது இசைவோடு அடிகளார் சிலப்பதிகாரத்தை இயற்றினார்.

சிலப்பின் சிறப்பினால் நாடகக் காப்பியம், குடிமக்கள் காப்பியம். புரட்சிக் காப்பியம், உரையிடையிட்டபாட்டுடைச் செய்யுள் என்றெல்லாம் வழங்குவர்.

திருமணச் சடங்குகள் சங்க கால முறைகளிலிருந்து மாறுபட்டுள்ளமையைச் சிலப்பதிகாரத்தில் காணலாம். பெற்றோர் விரும்பினால் சேர்த்து வைக்கும் திருமணமே கோவலன் கண்ணகி திருமணம்.

"நீல விதானத்து, நித்திலப்பூம் பந்தர்க்கீழ்
வான் ஊர் மதிய, சகடு அணைய வானத்துச்
சாலி ஒரு மீன் தகையானைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட
தீவலம் செய்வது காண்பார் கண் நோன்பு என்னை"

திருமண வைபவத்தின் பொழுது அக்கினி சாட்சி வைத்து தீவலம் வரும் பரபினை உலகிற்கு காட்டியது சிலப்பதிகாரமே. இன்றும் எம்மிடம் இம்மரபுளது.

கோவலன் கண்ணகியைத் திருமணம் செய்து தனிக்குடித்தனம் நடாத்துகின்றான். அவள்மீது ஆறாக் காதல் கொண்டமையை சிருங்காரம் நிறைந்த இலக்கியச் சுவையுடன் அடிகளார் கூறுகிறார்.

"மாது அறு பொன்னே! வலம்புரிமுத்தே!
காசு அறு விரையே! கரும்பேர் தேனே!
அரும் பெறல் பாவாய்! ஆர் உயிர் மருந்தே!
பெருங்குடி வாணிகன் பெரு மடமகளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகியை வாழ்த்துவதாய் உள்ள வரிகள் சிலப்பதிகாரத்தை நாடகக் காப்பியமாகும் தன்மையது. இதில் அரங்கேற்றுகாதை அடிகளாரின் இசை நுட்பத்தையும், ஆடல் நளினத்தையும் காட்டுகிறதெனலாம். நாட்டுப்புறப் பாடல்கட்கு முன்னோடியாய் கானல்வரி, ஆற்றுவரி, ஊசல் வரி, குன்றக்குரவை ஆகியவற்றின் மூலம் புதிய சந்த வகைகளைச் சிலப்பதிகாரம் தமிழுக்கு அளித்துள்ளது.

சங்ககாலத்தில் பரத்தையர்கட்கு கௌரவம் அளிக்கப்படவில்லை. ஆனால் சிலப்பதிகாரத்தில் அவர்கள் "கணிகையர்" எனும் பெயரில் மாளிகைகளில் செல்வாக்குடன் இருந்துள்ளனர். அவர்களும் மதிக்கப்படுபவர்களே என்பதை மாதவி மூலமாகச் சமுகத்திற்கு உணர்த்தி புரட்சி செய்துள்ளார் அடிகளார்.

பெண்களிடம் இருத்திறப் பண்புகள் உள்ளன என்பதனை அடிகளார் புகார் காண்டம் முழுவதிலும் ஒரு சில தொடர்களை பேசினாாள் கண்ணகி. ஆனால் அதே கண்ணகி வழக்குரை காதையில் "தீப் பிழம்பாக" மாறுகின்றாள். "அறம் பிழைத்தால் அரசே வீழும்" என்பதற்கு முன்னுதாரணம் சிலப்பதிகாரம். கண்ணகியை தெய்வமாக்கவும், சேரன் செங்குட்டுவன் பெருமையை கூற வஞ்சிக் காண்டத்தை பயன்படுத்தியுள்ளார்.

முப்பெரும் அரசுகளையும் (சேர, சோழ, பாண்டியன்) முப்பெரும் நகரங்களையும், (வஞ்சி, புகார், மதுரை) அத்துடன் முப்பெரும் ஆறுகளையும் (பேரியாறு, காவிரி, வைகை) விளங்கும் சிலப்பதிகாரம் முத்தமிழ் காப்பியம் என்பது பொருந்தும்.

ஆசிரியப்பா, கலிப்பா, வெண்பா இவற்றால் அமைந்து எளிய சந்த அமைப்பும், பாடற்போக்கும், பின்னர் எழுந்த பக்தி இலக்கியங்களுக்கு இக்காப்பியம் முன்னோடியாகயுளது.

பாண்டிய அரசன் அறம் பிழைத்தது. செங்கோல் கொடுங்கோல் ஆயிற்று எனப் பதறி உயிர்துறக்கிறாள். பாண்டிமாதேவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானும் அக்கணமே உயிர் துறக்கிறாள். இங்கே கற்பொழுக்கம் பேணப்படுகிறது. ஆனால் கண்ணகியோ பாண்டிய நாட்டையும் எரியூட்டி பிறிதொரு பரிமாணத்தை காட்டுகிறாள். மாதவியோ தனது கணவன் கோவலன் மட்டுத்தான் எனக் காட்ட துறவு கொள்கிறாள்.

இங்ஙனம் கற்புக்கு வெவ்வேறு இலக்கணங்களை வகுத்து அடிகளார் இலக்கியத்தில் புதுமை காட்டியுள்ளார். அடிகளாரின் இலக்கியத்திறன் வியக்க வைக்கிறது. வள்ளுவப் பெருந்தகை கற்புடைய பெண் ஆனவள், "மழை பெய் என்றால் பெய்யும்" என்றார் ஆனால் அடிகளாரோ, கற்புடையவள், "எரியென்றால் தீ எரிக்கும்" என்கின்றார்.

ஐம்பெருங் காப்பியங்களாக, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி. குண்டலகேசி, வளையாபதி, மணிமேகலை ஆகிய ஐந்துமாம். இவற்றில் சிலப்பதிகாரம் என்றென்றும் இலக்கிய நெஞ்சங்களில் நிறைந்து இலக்கிய வானில் பூரணநிலமாக ஒளிர்ந்து கொண்டே இருக்கும் என்பது உறுதியானது. இதனாலேதான் பாரதியார்,

"நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்றோர்
மணியாரம் படைத்த தமிழ்நாடு" எனப் போற்றுகின்றார்.

**திருமதி ஞானம் ஞானசேகர ஐயர்**

முன்னாள்

மத்திய மாகாண இந்துசமய பாட இணைப்பாளர் - ஆலோசகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச் சிரிப்பு

இறைவனின் இனிய சின்னம் சிரிப்பு. மனிதனுக்கு இச் சொத்து இறைவனால் வழங்கப்பட்டுள்ளது. சிரிப்பு என்பது பிறப்பின் பேரொளி: மகிழ்ச்சியின் வெளிப்பாடு: மனித குலத்திடமிருந்து பறித்தெடுக்க முடியாத வகையில் உடைமையாய் உள்ளது. சிரிப்பு, கோடி பொன்னைக் கொட்டினாலும் மனிதன் தனது சிரிப்பை இழந்து விடக் கூடாது. இடரிலும் தளரினும் இடைவிடாது போற்றிக் காக்கப்பட வேண்டியது இந்தச் சிரிப்பு.

மனிதன் ஒருவனால் தான் சிரிக்க முடியும் இல்லையா? இது மனிதனுடைய தனித்துவத்தை. ஏற்றத்தைக் காட்டி நிற்கிறது. ஏனைய உயிரினங்களால் சிரிக்க முடியாது. கவலைக்கு கை கண்ட மருந்து சிரிப்பு என்பர். இதனையே "இடுக்கண் வருங்கால் நகுக" என்கின்றது பொய்யா மொழி.

இனி இறைவன் சிரித்த சந்தர்ப்பங்களை நோக்குவோம். இறைவனது சிரிப்பின் பின்னணியில் எத்தனையோ நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளன.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும் என இறைவனின் புன்முறுவலை இத்தனை அழகாக தத்ரூபமாகப் பாட அப்பர் சுவாமிகளால் தான் முடிந்தது.

சிவனின் ஒரு மூர்த்தத்தில் தாருகாவனத்து முனிவர்கள் அவருடன் பொருத்துகிறார்கள். சிவனார் மேல் கோபம் கொண்ட முனிவர்கள் தமது அகந்தை, செருக்கு அறியாமை காரணமாக யானை ஒன்றை அவர் மேல் ஏவி விடுகின்றார்கள். இதனைப் பார்க்க இறைவனார்க்கு சிரிப்புத்தான் வந்தது. ஆனால் உமையோ நடுநடுங்கி விட்டார். சிவனார் தன்னை நோக்கி எதிர்த்து வந்த யானையைப் பார்த்து வேடிக்கையாகச் சிரித்து அதனைக் கொன்று அதன் தோலை உரித்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் திருமேனி மீது போர்த்தருளினார் என்பது புராதன வரலாறு. இக்காட்சியை வெகு அழகாப் பாடித் தந்துள்ளார் அப்பர் அடிகள் தனது பதிகத்தில்.

கடிதென வந்த கரிதனை யுரித்து
    அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியென நடையாள் பெய்வளை மடந்தை
    பிறைநுத லவளொடு முடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
    கொள்ளமு னித்திலஞ் சுமந்து
குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
    கோணமா மலையமர்ந்தாரே!

இனி, இறைவியின் புன்முறுவலை நோக்குவோம். இறைவன் திருவிளையாடல் புரியும் போது விளையாட்டுப் பிள்ளையாக மாறிவிடுவார். அதேநேரம் வேதங்களை ஓதும் அவர் திருமணிவாய் அனைவரையும் நெறிப்படுத்தும். சிவனாரின் அம்மை, அப்பர் திருவடிவத்திலே இடப்பாதி அம்மையின் வடிவம். வலப்பாதி அப்பனின் வடிவம். வலப்பக்கத்திலே ஐயன் வாய் வேதம் ஓதுதலைக் கண்ணுற்று, அம்மை பெருமிதத்தோடு புன்னகைப்பாளாம். இப் புன் முறுவலை அப்பர் சுவாமிகள் "மெல்ல நகுமால்" எனப் பாடுவர்.

கடவுள் இல்லை என்று கருதுபவர்களும், கடவுளின் உண்மையில் ஐயப்பாடுகொண்டவர்களும், கடவுள் எங்கோ ஒரு மூலையில் ஒதுங்கி இருப்பதாக எண்ணுபவர்களும். கடவுள் எங்கே நம்மை கவனிக்கப் போகிறார் என்று நினைத்துத் தீவினைகளை பல்வேறு வழிகளில் செய்து வருகின்றார்கள். ஒரு சிலர் மெய்யடியார்கள் போல் நடித்து உலகை ஏமாற்றி வருகின்றார்கள். இவர்களது கள்ளத்தனத்தை எல்லாம் எள்ளத்தனையும் தவறாமல் கடவுள் உள்ளிருந்து உடனுக்குடன் அவதானித்து வருகின்றார்.

தந்தைக்கு ஒளித்து நாம் ஒன்றைச் செய்து விடத்தான் முடியுமா? இதற்கு ஒரு கதை கேட்டுப் பாருங்கள். ஒரு தந்தை தன் மகனிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினாராம். "மகனே! நான் வெளியே செல்கின்றேன் வரும்வரை இந்தக் குதிரை எக்காரணம் கொண்டும் திறந்து பாராதே இது என் ஆணை" தந்தை சென்ற பின் மகனுக்கோ ஒரே ஆவல். எப்படியாவது அப்பா வருமுன் இக்குதிருக்குள் என்ன இருக்கின்றதென்று பார்த்து விட வேண்டும். அங்கும் இங்கும் பார்த்து விட்டு சட்டென்று குதிரைத் திறந்து பார்த்தான் பையன். குதிருக்குள் இருந்து அப்பா வெளியே வந்தார்.

எப்படியிருக்கும் மகனுக்கு? கையும் களவுமாக அல்லவா பிடிபட்டு விட்டான்! இதேபோன்று தான் கடவுளையும் ஒளித்து எண்ண ஓர் எண்ணமுண்டோ? எம்முள்ளே ஈசனை வைத்துக் கொண்டு நாம் அவனுக்கு எதனை ஒளிப்பது? எப்படி ஒளிப்பது? எங்கே ஒளிப்பது? இதனைக் கண்ணுறும் இறைவன் போலிவேட தாரிகளைக் கண்டு சிரியாமலா இருப்பான்?

எனவே கள்ளம் வேண்டாம். வெள்ளை உள்ளத்தோடு செயற்படுவோம். நிட்சயம் வெள்ளை விடையேறியோன் அருள் எமக்கு கிடைக்கும்.

*நன்றி :- சைவ நற்சிந்தனைகள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வுகளைக் கையாளும் திறன்
## Emotional Intelligence

தொழிலில் வெற்றிபெற வாழ்க்கையில் நிம்மதியாக இருக்க, சமூகத்தில் மதிக்கப்பட புத்திசாலித்தனம் மட்டும் போதாது. எமோஷனல் இண்டலிஜன்ஸ் என்னும் உணர்வுகளைக் கையாள்வதில் திறமைசாலியாக இருத்தல் வேண்டும்.

நாம் அனைவரும் உணர்ச்சி வசப்படக்கூடியவர்கள். அதீதமான கோபம், பயம், வெட்கம், துக்கம், மகிழ்ச்சி என என்னென்னவோ உணர்வுகள் வருகின்றன. அவை எல்லை மீறும் போது ஏதோ செய்து விடுகின்றோம். பின்பு யோசித்துப் பார்த்தால் எமக்கே கூட வெட்கமாகவும். மனவருத்தமாகவும் கூட இருக்கும். ஆனால் நடந்தது நடந்தது தான். மாற்ற முடியுமா?

தேநீருக்கு சீனி சேர்ப்பதுபோல் உணவுக்கு உப்பு சேர்ப்பது போல் தேவைக்கு ஏற்ப கையாளப்பட வேண்டிய இந்த வஸ்து தான் நம் வாழ்வில் பல கட்டங்களில் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கின்றது.

எந்த உணர்ச்சியையும் அடக்கு என சொல்ல முடியாது. சொல்லவும் கூடாது இயற்கையாக நமக்கு வருகின்ற உணர்ச்சிகள் அனைத்தும் வாழ்விற்கு வண்ணம் சேர்க்கின்ற விடயங்கள் தான். அவை கொஞ்சம் கூடுதலாகவோ குறைவாகவோ ஆகும் போது தான் பிரச்சினையே.

படிப்பு. அறிவு ஆகியவற்றைத்தான் Intelligence என்கின்றோம். வாழ்க்கைக்கு இவை இரண்டும் இருந்தால் வெற்றி பெற்று விடலாம் என அனைவரும் நினைத்திருந்தார்கள்.

ஆனால் இதில் சிறந்து இருந்தவர்களில் பலர் வெற்றிபெறாததும் சுமாரான அறிவு, கல்வி இருந்தவர்கள் வாழ்க்கையில் வெற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றதும் ஆராய்ச்சியாளர்களின் கவனத்தை ஈர்த்தது. இது ஏன் எப்படி என ஆராய்ந்தவர்கள் பொதுவான அறிவு தவிர Emotional Intelligencesஎன்ற (உணர்வுகளைக் கையாளும் திறன்) ஒரு திறன்தான் அந்த வெற்றி பெற்ற சிலரிடம் மிகுந்திருப்பதைக் கண்டறிந்திருந்தார்கள்.

தன்னை, தன் உணர்ச்சிகளை திறம்பட நிர்வகித்துக் கொண்டும், பிறருடைய உணர்வுகளையும் சரியாக புரிந்து கொண்டும் நடப்பவர்கள் நிச்சயம் வெற்றி பெறுகின்றார்கள் என்ற முடிவுக்கு வந்து விட்டார்கள்.

"இதுதான் உணர்வு பற்றிய புத்திசாலித்தனம்"

இந்தப் புத்திசாலித்தனம் குடும்ப வாழ்க்கையில் பிரிவினையைத் தவிர்க்கும். உறவுகளில் உறுதித்தன்மையை வளர்க்கும். மற்றும் காரியாலயங்களில் பிரச்சினையைக் கையாளத் தெரிந்து இருக்கும். மற்றும் ஊழியர்களின். வாடிக்கையாளர்களின் உறவுகளைப் பலப்படுத்தும்.

சமூகத்தில் உங்களுடைய மதிப்பை உயர்த்தும்.

ஆகவே உணர்வுகளைக் கையாளத் தெரிந்த ஆளுமை உள்ளாங்கள் அறிவு, கல்வியுடன் மற்றவர்களுடன் இங்கிதமாக பழகத் தெரிந்தவர் என்றால் நிச்சயமாக வாழ்க்கை, காரியாலயம், அல்லது தொழில், சமூகம் எல்லாவற்றிலும் வெற்றி பெற முடியும்.

**மிதிலா ஸ்ரீபத்மநாதன்** (B.com)
நிறைவேற்று அதிகாரி,
இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பத்தமிழ்

தமிழ் மொழியின் தோற்றம், தன்மை, இனிமை, மேன்மை இளமை பற்றி அறியாதவர் தமிழரில் பலர் உள்ளனர். தமிழ் இயல், இசை, நாடகமாக காதுக்கும் கண்ணுக்கும் விருந்தாவது பற்றியும் அகமாகவும் புறமாகவும் வாழ்க்கையை சுவைப்படுத்தும் சிறப்பு பற்றியும் தமிழ் பெற்றுள்ள இலக்கிய இலக்கண நூல்கள் பற்றியும் அண்மைக்காலத்திலேயே அறிய ஆரம்பித்துள்ளனர். நமது தாய்மொழி தமிழ். அதைப் போற்றி வளர்ப்பது எமது கடன் என்ற தெளிவு இல்லாமல் இருந்தது.

பல அறிஞர்கள் தமிழ் குறித்து நிகழ்த்திய ஆராய்ச்சிகளாலும் தமிழ் கவிஞர்களும், அறிஞர்களும் ஏற்படுத்திய மறுமலர்ச்சி எண்ணங்களாலும் பொதுமக்கள் தெளிவடையத் தொடங்கினர். இன்று கூட தமிழ் பற்றித் தேர்ச்சியடைந்த தமிழர்கள், தாம் நிகழ்த்தும் கோயில் வழிபாடு. திருமண விழாக்கள், குடும்பச் சடங்குகள் ஆகியவற்றை வடமொழியிலேயே நிகழ்த்துகின்றனர். தேசியகவி சுப்பிரமணிய பாரதியார் மக்கள் உணர்ச்சியை பாடல்கள் மூலம் தட்டி எழுப்பி தமிழ் வேற்றுமொழிகளை விட மேன்மையானது என்பதை உலகறியச் செய்தார். அவரின் "வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி....." என்ற பாடலும் "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்...." பேன்ற பாடல்களின் மூலம் தமிழின் பெருமையினை எடுத்துணர்த்துகின்றார்.

மேல்நாடுகளிலிருந்து கிறிஸ்தவ சமய தொண்டாற்ற வந்த பாதிரிமார்கள் தமிழ்மொழியையும் கற்று. பிற மொழிகளோடு ஒப்பிட்டு தமிழ்மொழியின் மேன்மையையும், பிற மொழிகளில் காணாத சிறப்பியல்புகளையும் தக்க சான்றுகளுடன் ஆங்கிலமொழியில் நூ ல்களாக எழுதிக் காட்டினர். ஆங்கில புலமையும் தமிழ் தேர்ச்சியும் நுண்ணறிவும் கொண்ட தமிழறிஞர்கள் அந்நூல்களைக் கற்று தமிழ்மொழியின் தனியுரிமை, பெருமை காக்கப்பட வேண்டுமென எடுத்து சொல்லி வந்ததால் பலருக்கு தமிழ்மொழியின் சிறப்பு தெரிய வந்தது. அத்தகைய வழிகாட்டலில் "மனோன்மணியம்" எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடக நூலை இயற்றி வழங்கிய பேராசிரியர் சுந்தரம்பிள்ளை ஆங்கிலப்புலமையும், தமிழ்ப்புலமையும் மிக்கவர். அவர் தாய்மொழியைப் போற்றி வணங்கி பாடிய பாடல்களுள் ஒன்று பின்வருமாறு:

"நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமம் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திரைசயும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே"

பெரு நீர்ப்பரப்பாகிய கடலை, ஆடையாக அணிந்துள்ள நிலமகளுக்கு, இயற்கை அழகு நிரம்பிய சிறப்புமிக்க ஒளிமுகமென விளங்குகின்ற பரதகண்டம் எனும் துணைக்கண்டத்திலும், பொருத்தமாக அமைந்த, பிறைமதியினை நெற்றியாகவும் அதில் விளங்கும் நறுமணம் கமழும் பொட்டாகவும், விந்தியத்திற்கு தெற்கே உள்ள தெக்கணமும், அதிலும் மேம்பாடுள்ள திராவிடத் திருநாடும், விளங்குகின்றன. எனக் கூறி உலகத்தை ஒரு பெண்ணாகவும் அவளின் முகத்தை பாரதம் என்றும் நெற்றியை தெக்கணமென்றும் அதில் திகழும் திலகம் திராவிடமென்றும் எழுமணமாக உலகெங்கும் உள்ளவர்கள் இன்பமெய்திடவும் அனைத்து திசைகளிலும் இருந்து புகழ்பரப்பி எம்மை வாழ்விக்கிறாள் என்பது இப்பாடலின் பொருளாகும். இப்பாடல் தமிழ் விழாக்களில் தமிழ் வாழ்த்தாகப் பாடப்பட்டு வருகின்றது.

இவ்வாறு தமிழன்னையின் தன்னிகரற்ற பெருமையும் அதைப்போற்றி வழிபடுவோர் பெறும் நன்மைகளை உணராது மாறுபட்ட கருத்து உள்ளவர்களை நம் தாய்மொழி ஆகிய தமிழைப் பற்றி கொண்டிருந்த தாழ்வு மனப்பாங்கை மாற்ற பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் பல பாடல்கள், தமிழராகத் தலைநிமிர்ந்து வாழ வகுத்துள்ளன. செந்தமிழ் தேனாக, பாலாக, அமிர்தமாக சொல்லாலும் கவிதையாலும் தமிழுழை தம் செவிவழி பாய்ந்து அறிவை நிறைக்க புத்துணர்ச்சியூட்டி வளர்ப்போமாக.

**திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி**
உதவிச் செயலாளர், கொ/ தமிழ்ச் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே புணர்த்திப் பாருங்கள்
# புதிர்கள்

**கைகள்**

| | | |
|---|---|---|
| வாழ்வைக் குறிக்கும் கை | - | வாழ்க்கை |
| உறுதியான கை | - | நம்பிக்கை |
| நதியைக் குறிக்கும் கை | - | கங்கை |
| பெண்ணைக் குறிக்கும் கை | - | மங்கை |
| கடலில் நீந்தும் கை | - | திருக்கை |
| யானையிடம் இருக்கும் கை | - | தும்பிக்கை |
| சகோதரியைக் குறிக்கும் கை | - | தங்கை |

**மைகள்**

| | | |
|---|---|---|
| திரும்பப் பெற முடியாத மை | - | இளமை |
| அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய மை | - | பொறுமை |
| உயர்ந்தோரைக் கண்டு உள்ளத்தில் ஏற்படக் கூடாதமை | - | பொறாமை |
| வாழும் போது சேர்க்க வேண்டிய மை | - | பெருமை |
| உலகில் போற்றப்பட வேண்டிய மை | - | தாய்மை |
| உனக்குள் ஒழிந்து கிடக்கும் மை | - | திறமை |
| எதையும் வெல்லக் கூடிய மை | - | வாய்மை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில சுகாதார டிப்ஸ் (பழமொழிகள்)

1. சீரகம் இல்லா உணவு சிறக்காது.
2. தன் காயம் காக்க வெண்காயம் போதும்.
3. வாழை வாழ வைக்கும்.
4. அவசர சோறு ஆபத்து.
5. இரப்பைப் புண்ணுக்கு எலுமிச்சைச் சாறு.
6. இரத்தக் கொதிப்புக்கு அகத்திக் கீரை.
7. இருமலைப் போக்கும் வெந்தயக் கீரை.
8. உண்ணா நோன்பு ஆயுளைக் கூட்டும்.
9. உஷ்ணம் தவிர்க்க கம்பங்களி.
10. கல்லீரல் பலம் பெற கொய்யாப்பழம்.
11. கொலஸ்ரோல் குறைக்க பன்னீர் திராட்சை.
12. சித்தம் தெளிய வில்வம்.
13. சூட்டைத் தணிக்க கரணைக்கிழங்கு.
14. ஜீரண சக்திக்கு சுண்டக்காய்.
15. தலை வலி நீங்க முள்ளங்கிழங்கு.
16. தேனுடன் இஞ்சி இரத்தத் தூய்மை.
17. பூண்டிலிருக்கும் பென்சிலின் சக்தி.
18. மூல நோய் தீர வாழைப்பழம்.
19. வாந்திக்கு மருந்து மணத்தக்காளி.
20. வாத நோய் தடுக்க அரைக்கீரை.
21. வாய் துர்நாற்றம் தீர்க்க ஏலக்காய்.
22. பருமனைக் குறைக்க முட்டைக்கோஸ்.
23. பித்தம் தணிக்க நெல்லிக்காய்.
24. குடல் புண் தணிக்க அகத்திக்கீரை.

**J.H.L.C. ஞானேஸ்வரி ஞானசேகரம்**
யா/இந்து கல்லூரி பழைய மாணவி
சங்க உறுப்பினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் அறிந்திருக்க வேண்டியவை

நட்சத்திரங்கள் 27

| | | |
|---|---|---|
| 1. அச்சுவினி | 2. பரணி | 3. கார்த்திகை |
| 4. ரோகிணி | 5. மிருகசீரிடம் | 6. திருவாதிரை |
| 7. புனர்பூசம் | 8. பூசம் | 9. ஆயிலியம் |
| 10. மகம் | 11. பூரம் | 12. உத்தரம் |
| 13. அத்தம் | 14. சித்திரை | 15. சுவாதி |
| 16. விசாகம் | 17. அனுஷம் | 18. கேட்டை |
| 19. மூலம் | 20. பூராடம் | 21. உத்திராடம் |
| 22. திருவோணம் | 23. அவிட்டம் | 24. சதயம் |
| 25. பூரட்டாதி | 26. உத்திரட்டாதி | 27. ரேவதி |

## பன்னிரு ராசிகளும் அவற்றிற்குரிய நட்சத்திரங்களும்

1. **மேடம்**
அச்சுவினி, பரணி. கார்த்திகை முதலாங்கால்

2. **இடபம்**
கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடம் முன் அரை

3. **மிதுனம்**
மிருகசீரிடம் பின் அரை திருவாதிரை, புனர்பூசம் முன் முக்கால்

4. **கர்க்கடகம்**
புனர்பூசம், நாலாங்கால், பூசம், ஆயிலியம்

5. **சிங்கம்**
மகம், பூரம், உத்தரம் முதலாங்கால்

6. **கன்னி**
உத்திரம் முன் முக்கால், அத்தம், சித்தம் முன் அரை

7. **துலாம்**
சித்தம் பின் அரை, சுவாதி, விசாகம் முன் முக்கால்

8. **விருச்சிகம்**
விசாகம், நாலாங்கால், அனுஷம், கேட்டை

9. **தனுசு**
மூலம், பூராடம், உத்தராடம், முதலாங்கால்

10. **மகரம்**
உத்திராடம் பின் முக்கால் திருவோணம், அவிட்டம் முன் முக்கால்.

11. **கும்பம்**
அவிட்டம் (பின் அரை), சதயம், பூரட்டாதி முன் முக்கால்.

12. **மீனம்**
பூரட்டாதி நாலாம் கால், உத்திரட்டாதி, ரேவதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலும் கற்பும்*

காதல் என்பது காதுக்கினிய சொல்; கருத்துக்கினிய பொருள். காதல் உண்டாயின் இவ்வுலகில் எல்லாம் உண்டு; காதல் இல்லையேல் ஒன்றும் இல்லை. "காதல், காதல், காதல் - இன்றேல் சாதல், சாதல், சாதல்" என்று பாடினார் பாரதியார். ஆயினும், அச்சொல்லை எல்லோரும் கூசாமல் பேசுவதில்லை. சின்னஞ் சிறியவர் காதில் அது விழலாகாதாம். கன்னியர் வாயில் அது வரலாகாதாம். இப்படி ஏன் அச்சொல் ஒதுக்கப்படுகின்றது? தமிழ்க் கவிகள் காதல் என்ற சொல்லை எடுத்தாளவில்லையா? நீதி நூல்களில் அச்சொல் வரவில்லையா? திருப்பாடல்களில் அஃது இடம்பெறவில்லையா? காவியங்களிலும், நீதி நூல்களிலும், திருப்பாசுரங்களிலும் பயின்ற அழகிய தமிழ்ச் சொல்லை ஏன் கூசிக் கூசிப் பேச வேண்டும்? தேவாரத்திலே அடியாரது காதல் பேசப்படுகின்றது.

"காதலாலே கருதும் தொண்டர்
காரணத்தர் ஆகி"

நின்ற சிவபெருமானைச் சுந்தரர் பாடுகின்றார். இன்னொரு பெரியார் - திருஞான சம்பந்தர் - இறைவன் திருநாமத்தை ஓதும் காதலடியார் பெருமையைக் கூறுகின்றார்.

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சி வாயவே"

என்பது அவர் திருப்பாட்டு. இவ்வாறு தேவாரம் முதலிய தெய்வப் பாடல்களிற் பயின்ற காதல் என்ற சொல்லைக் கடி சொல்லாகக் கருதலாமோ?

காதல் என்ற சொல்லின் பொருள் தான் என்ன? அன்பு என்றாலும் காதல் என்றாலும் பொருள் ஒன்றே. பெற்றோர்க்குப் பிள்ளையிடம்

* சென்னை வானொலி நிலையத்திலே பேசியது; நிலையத்தார் இசைவுபெற்றுச் சேர்க்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள அன்பு காதல் தான். 'கடந்த பேர்களும் கடப்பரோ மக்கள்மேல் காதல்' என்று கவிஞர் பாடவில்லையா? பெற்ற பிள்ளையைக் காதலன் என்று கூறுவதுண்டு. வாலியின் மைந்தனாகிய அங்கதனை 'வாலி காதலன்' என்று குறிக்கின்றார் கம்பர். இவ்வாறே நண்பனையும் காதலன் என்று கவியரசர் கூறுவர். கங்கைக் கரையிலே இராமனுடைய நண்பனாயினான் குகன். அவன் அன்பிற்குக் கங்கு கரையில்லை. அது கண்ட இராமன்,

"சீதையை நோக்கித் தம்பி திருமுகம் நோக்கித் தீராக்
காதல னாகும் என்று கருணையின் மலர்ந்த கண்ணன்
யாதினும் இனிய நண்ப இருத்தி ஈண்டு எம்மொடு என்றான்"

எனவே, பக்தியும் காதல்; பிள்ளைப் பாசமும் காதல்; நேசமும் காதல்: சுருங்கச் சொல்லின் தலை சிறந்த அன்பே காதல்.

இவ்வளவு விரிந்த பொருளில் வழங்கிய காதல் என்ற சொல், இப்பொழுது ஆண் பெண் என்னும் இரு பாலாரிடையே உள்ள அன்பையே பெரும்பாலும் குறிக்கின்றது. காதலன் என்றால் கணவன்; காதலி என்றால் மனைவி. இவ்விருவரையும் இல்வாழ்க்கையில் இழுப்பது காதல். பின்பு இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக நடைபெறச் செய்வதும் காதல். கண்ணிரண்டும் ஒன்றையே காண்பது போல இல்வாழ்க்கையில் ஈடுபட்ட இருவரையும் ஒரு நெறிப்படுத்தவது காதல். "காதல் மனையாளும் காதலனும் மாறின்றித் தீதில் ஒரு கருமம் செய்பவே" என்றார் ஒரு கவிஞர்.

ஆதியில், காதல் மணமே தமிழ் நாட்டில் சிறந்து விளங்கிற்று. 'காதல் இல்லாத வாழ்க்கை உயிரில்லாத உடல் போன்றது' என்பது தமிழர் கொள்கை. காதலுற்ற கன்னியர், தம் கருத்து நிறைவேறும் வண்ணம் காமனை வேண்டிக் கொள்ளும் வழக்கமும் முற்காலத்தில் இருந்ததாகத் தெரிகின்றது. காதல் விளைக்கும் தேவனைக் 'காமன்' என்றும், 'காமவேள்' என்றும் தமிழர் அழைத்தனர். தாம் கருதிய காதலனைக் கணவனாகப் பெறுவதற்கும், பிரிந்த கணவனை மீண்டும் அடைவதற்கும், காமன் கோயிலிற் சென்று மங்கையர் வழிபடும் வழக்கம் அந்நாளில் இருந்தது. கோவலன், மாதவி என்னும் நடிகையின் மையலிலே மூழ்கித் தன் மனைவியாகிய கண்ணகியைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிந்திருந்தபோது, 'காமவேள் கோயிலிற் சென்று தொழுதால் கணவன் மீண்டும் வந்து சேர்வான்' என்று அக்கற்பரசியிடம் அவள் உயிர்த் தோழி எடுத்துரைத்தாள்.

"கடலொடு காவிரி சென்றலைக்கும் முன்றில்
காமவேள் கோட்டம் தொழுதார் கணவரொடு
தாமின் புறுவர் உலகத்துத் தையலார்"

என்று கூறினாள் தோழி. இதனால், காவிரிப்பூம் பட்டினத்தில், அந்த நாளிலே காமன் கோயில் இருந்ததென்றும், குலமாதர் அங்குச் சென்று வழிபடும் முறை இருந்ததென்றும் நன்றாக விளங்குகின்றன. இன்றும், தமிழ் நாட்டின் பல பாகங்களில் காமன் பண்டிகை கொண்டாடப்படுகின்றது. 'ஈசனுடைய நெற்றிக்கண்ணால் காமன் எரிந்து போனான்' என்று வாதிப்பாரும், 'அப்படியில்லை' என்று சாதிப்பாரும் இக்காலத்தும் தமிழ்நாட்டிலுண்டு.

காமம் என்ற சொல்லும், காமன் என்ற பெயரும் தமிழ் நூல்களிலே எடுத்தாளப்பட்டாலும் இன்று அவை இழிந்த பதங்களாகவே எண்ணப்படுகின்றன. காமம் என்பது வடசொல்; இன்பம் என்னும் பொருள் அதற்குண்டு. உறுதிப் பொருள்களைத் "தர்மார்த்த காமமோட்சம்" என்று வடமொழியாளர் கூறுவர். இவ் வடமொழித் தொடருக்கு நேரான தமிழ், "அறம் பொருள் இன்பம் வீடு" என்பது. எனவே, காமம் என்பது இன்பம் என்ற பொருளைத் தருகின்றது. திருவள்ளுவர் காலத்தில் காமம் இழிந்த சொல்லாகக் கருதப்படவில்லை என்று தெரிகின்றது. அறம் பொருள் இன்பம் என்ற முப்பாலைப் பற்றி எழுதிய திருவள்ளுவர் இன்பப் பகுதிக்குக் காமத்துப் பால் எனப் பெயரிட்டார் என்றால், அவர் காலத்தில் காமம் இழிந்த சொல்லாகக் கருதப்படவில்லை என்பது தெரிகின்றதல்லவா?

ஆயினும், காலகதியில் காமம் என்பது துன்மார்க்கத்திற் பெறும் இன்பத்தைக் குறிப்பதாயிற்று. காமி, காமுகன் முதலிய சொற்கள் தூர்த்தன் என்ற பொருளிலே வழங்குகின்றன. காமுகன், கல்வி கற்பதற்கும் தகுதியற்றவன் என்று நன்னூல் கூறுகின்றது.

*- தமிழ் இன்பம் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RUTHRAVEENA
# IT'S NAME AND FAME

The stringed instrument veena is divine as music itself. It is referred as yazh in sanga Ilakkiyam. In Indian Music during the early period, word veena denoted any stringed instrument. During the Vedic Age variety of this type of instruments were in usage. In Tamil literature Veena is mentioned as Narambukaruvi. Veena among carnatic Instruments occupies a position of a distinctive individuality - its identification with divinity guaranteeing a special significance to it.

`yazh' has been dominant in the field of instrumental music in south India from Ancient times. A seal in the relies of the Indus valley civilization excavations, carries the figure of a harp. Varieties of harps were used in the classical music of the Tamils and others suitable to follow the simple melodies of the wandering bards fenestration has been in evidence too.

The Maha veena a close associate to Vedic chanting, is believed to have had hundred strings, divided into groups of ten strings each clustered group fixed to a hole or a peg. It seems to have been played with tapering bamboo sticks held in both the hands with forceful upward strokes.

The Ekatantiri veena according to sarangadeva was scooped of a well seasoned khadirawood. This type of veena was more suitable to provide to drone or to follow or play simple and short range melodies.

Besides this particular instrument veena has enjoyed a pride of place as an instrument suitable to demonstrate musical laws and principles. Bharata's experiment with Dhruva veena and Chala veena and sarangadevas experiments with sruti veena and swara veena resulted in the necessition of a variety of intervals between the pitches of notes. This is the backbone of Indian music over which the stupendous structure of its melody has been built, containing aesthetics, emotion and colorfulness. The veena of today has imbibed



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

all these characters and can be treated as a composite instrument which combines rhythm, melody and harmony in which notes belonging to two cotaves can be sounded simultaneously.
In the course of line when concert pattern was put in vague, the veena was at first used as an accompaniment to singing. It was also part of the dancers orchestra soon it found its way solo platform. A class of vainikas soon gained universal recognition each one of these standing out with a distinctive style of handling the instrument.

Among the Musical trinity Muthuswamy Dikshitar is believed to have received the veena as a divine gift. His brother Baluswamy Dikshitar was also a skilful veena player. Veena kuppier a deciple of Tyagaraja was a vocalist and vainika.

Among all the credit of presenting the veena in the form that we have today, goes to Govinda Diskhitar.

Veena Dhanammal a born musician with thorough musical knowledge and technical skill could make the instrument speak out her musical thoughts to perfection. Her name is inseparable from the instrument. Her style of playing veena made her enjoy what she played and allowed the listeners to share her joy. The image of any raga was beautifully carved in sound and could inspire rapture.

Now coming to vidvan veena seshanra of mysore- he received so many royal awards of unassuming and lived in a simple style. His excellence in lava complexities was evident is swaraprasataras, thanam and Pallavi. He has also composed a few Varnams and thillanas specially for the veena vidvan Venkataramanadas of visagapura vainika whose break neck speed on the string and swift manipulations in changing the octaves, his absolute control over the rhythm, had to be heard, to be believed. He held the veena upright while playing, following, Kalyana kirishna bhagavatar, the Karaikudi Brothers, Emani Sankarasastiri- his worthy pupil chitty Babu,a versalile genius S. Balachandar, K.S.Nanayanaswamy, K.P.Sivanandan and his wife sarada, Veena Gayathiri can he listed as veena performers-though it is not possible to list all Veena performers in our midst today.

The veena music is considered to be almost on par with vocal music. Veena cannot only produce ten kinds of gamakas but also can evoke certain grace notes which belong to the instrument alone. Ragas both



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Major and Minor can be well developed on the veena orchestras music and any kind of backround music too can be developed on this instrument. Veena has a voice of its own.
Now this chamber instrument has traveled from the chamber to the concert hall (but still it remains a part of our Culture). The contact mike is introduced to increase the volume of sound when this instrument is played in a large hall.

The presence of gods is invoked in parts of the veena- as Thandu Shiva, playing and stringsuma. kakuba- kamalapathy a bridge like brass piece at the end of the veena where the strings pass by

Nagapasha body of the Gudam- Laxmi

Surakai or kind of-Gourd- Bhirama

meeru ivory piece, Godess- Saraswathy

"U" shaped ivory at the joint of Gudam- Vasuki

Piece of bridge made of bronze steel- Moon

Twenty four frets- Sun



Among the seven strings of the veena, four stings on the bridge are meant for playing and other three strings are for Tala. The first string is called Saarini, the secord Panchama, the third Mandara and the fourth is named as Anumandara. The four are compared to the four Vedas Rigveda, Yasurveda, Samaveda and Atharvamaveda respectively.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Regarding the wood used for manufacturing veena is jack- wood. At times teak is also used fully grown jack- wood will be red and yellow in colour. That is of the standard quality wood. People do not know the secret of lord Shiva for a long lasting veena- if not properly grown the sap wood will in course of time decay and eaten by wood worms. After seasoning the wood then only the parts will be joined. The wood seasoning time is six months.

Wood, mere bronze or ivory plates, twenty four frets, rectangular shape of bronze to fix on the bridge for the strings to pass over, pakka thala reku made of bronze or brass on which the tala strings pass over it, brides which in Tamil we call birugadal seven brides made of rose Ctad~ wood, for the seven strings to fit on, all together join in a complete veena.

Gourd or surakai- made of pulp or fibre or real gourd for the veena to rest on the front side-Ivory or small metal pegs for the tala strings to pass over- kuppe- a bronze cup shape type to hold and rest on the surakai- then be wax charcoal powder to mix with wax, for the mela, sealing wax, wood gum (glue) and colourless polish, along with.

These are the most important things one needs to manufacture a veena because it can be played solo. Besides it is suitable for chamber music as well as concert music, in a hall where the "Accoustics" is perfect.

Concerning India among all musical instruments in this country, veena is the outstanding one commands veneration among all our other instruments.

The difference in veenas is shown not in shape but in the number of strings used. It can be said that all the string instruments (Tatayantra) of India have their origin in the veena. Veena can be described as an instrument embodied by all the gods and goddesses. The type of veena godess Saraswathy is holding in her hand, is named as Kachapi veena.

The glory of veena is that it is created on the basis of creation of the universe. Its music is called the veda geetha which protects man and counts him as a holy man even though he has committed bramahathythosha- sinfulness of killing a Bhramin. Just a glance of



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

veena restores heaven, moksha and secular happiness also. Most of the sages including Bharathamuni have praised the greatness of veena in their writings. People do not know the secret of lord shiva, holding the veena while preaching the veena to the four sages sanakar, Sanatharar, Sanantharar and Sanathumarar. In this veenathara thadshanamoortham.

Touching on the historical aspect of veena it is sure one of the ancient instruments of music, having seven strings exsisting from the times of Vedas. It is great in helping oneself for meditation and Nathayoga. Veena stands for knowledge of a symbol of perfect knowledge through the personification of Saraswathy thevy,- godess of speech and eloquence, patroness of Arts and Science. Veena dates from vedic times. The vedic hymns chanted at the time of yoga. Yagna, pooja at temple. Here playing on the veena as an accompaniment, followed. The lover of playing veena from ancient time can he listed thus. The great king Ravana alias Veenai Kodiyoon, RamaBhaktha Hanuman, Narada, Thumburu. Lava, Kusha are several epic characters of whom Indian legends speak volumes.

The melody of veena aids, meditation through nadayoga which gives Natha Bhraman salvation. The performance of veena gives mental and spiritual happiness, bliss it is, for young and old, irrespective of caste, creed, celoursex,etc for and of all times. In short, Indian Music being devotional guides on the perfect harmony with Natune within and without.

Another plus point about this holy instrument is that, it is the most complete instrument in the world deriving immensible pleasure from Music. Upanishath says those who, learn veena, teach veena, enjoy its natha, deals with veena reaches Modsha very very easily.

*"Vellai Thamarai Poovil Iruppall*
*Veenai Seyum Oliyi! Irupall"* Bharathy.

By
**Kalapooshanam Rajeswari Jeganandaguru** M.A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NICK NAMES

There was an era of superstition when men feared for the safety of their children who may be spirited away by the super natural elements .So in order to fool these unseen spirit , they had given an 'eke names'- another name as a nick name for the child and never addressed them by their Christian name. So they thought they could fool evil spirits.

That is how nick names came in use.

Nicknames may be cute like pet names or be one of ridicule or familiarity, clever and funny and may tell about a person's features or behavior.

For example a thin tall person was called BEAN POLE. A person called SUNDAY had only one eye and he was called one –eyed Sunday.

Some historical personages were also called by nick names for example the Roman Emperor caligulan's name means 'little boot'- his real name was-CaliLIS Caesar Germanier. The second name of the Holy Roman Emperor Fredrick Barbarosa was 'Red Beard'.

Comedian Richoard was called 'Red Skeleton 'he got his name from his red hair.

American history teems with nick names. 'Buffalo Bill Calamity Jane Johnny Purple Seed' 'Butch Cassidy ' and many more.

Before Normans conquered Britain, people had only one name.

A girl born during famine was called Una which was Celtic for famine.

In Russia some nick names were used as proper names like Stalin meaning a man of steel.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Over here in Asian countries nick names are used more to ridicule people .For example a person whose teeth in the upper jaw jut out is called 'Cow-Catcher There was clerk in a lawyer's office in Nwara-Eliya .During tea time he would walk up to the junction and would be looking up at the sky. He was called; Sum Gazer.'

Some times nicknames could be cruel .a person who was very dark –in fact pitch black was called 'Black Out'. A girl whose lips were dark was named 'Chain Smoker'

A maths teacher who kept on telling her students she wants accuracy in every sum was promptly named 'accuracy'

Students have a habit of giving nick names to their teachers mostly ridiculing them. Sometimes these names were in bad taste.

To top it all was the case of a judge whose verdicts were always wrong much to the frustration of the lawyers who aptly named him; Necessity

**Late Mrs. Thilaga Wijayaratnam**
O.G.H.L.C.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் இந்து மகளிர் கல்லூரி
# பழைய மாணவிகள் சங்கம் - கொழும்பு

சங்கத்தின் இருபத்திஐந்தாவது ஆண்டுப் பொதுக் கூட்டம் 2018 டிசம்பர் மாதம் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அவர்களின் தலைமையில் வெள்ளவத்தை, இராமகிருஷ்ண வீதியில் அமைந்துள்ள சண்முகாஸ் உணவகத்தில் மதிய போசனத்துடன் நடைபெற்றது.

இருபத்தி ஐந்தாவது ஆண்டு செயற்குழு அங்கத்தவர்கள் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| போஷகர் | : | திருமதி சரஸ்வதி ஜெயராஜ்<br>திருமதி உமாராணி குமாரசாமி |
| தலைவி | : | திருமதி அபிராமி கயிலாசபிள்ளை |
| உப தலைவி | : | |
| செயலாளர் | : | திருமதி மிதிலா ஸ்ரீ பத்மநாதன் |
| உப செயலாளர் | : | திருமதி விமலா மாணிக்கவாசகன் |
| பொருளாளர் | : | திருமதி சிவமலர் சுப்பிரமணியம் |
| உப பொருளாளர் | : | திருமதி கௌரி ரமணா |
| நிர்வாகக்குழு | : | திருமதி பிரேம்குமாரி கயிலைநாதன்<br>திருமதி ருக்மணி அரசரட்ணம்<br>திருமதி சின்னையா கலையரசி<br>திருமதி புவனேஸ்வரி யோகலிங்கம்<br>திருமதி அருளாம்பிகை கனகேந்திரன்<br>திருமதி திலகா விஜயரட்ணம்<br>திருமதி மகேஸ்வரி கணேசமூர்த்தி<br>திருமதி கமலேஸ்வரி திருநாவுக்கரசு<br>திருமதி மங்களேஸ்வரி சிவராஜா<br>திருமதி சகிலா சுரேஷ் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்நாதம் ஆசிரியை : திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு

உதவி ஆசிரியை: திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம்

பொன்விருது : எங்கள் கல்லூரியின் 2017 ம் ஆண்டுக்கான சிறந்த மாணவிக்கான பொன்விருது எமது சங்கத்தினால் உரிய மாணவிக்கு வழங்கபட்டது.

இந்து மகளிர் கல்லூரி மாணவிகளுக்கான உதவி :-

எங்கள் சங்கத்தின் அன்பளிப்பான நிலையான வைப்பிலுள்ள ரூபா 500,000/= த்தில் வரும் வட்டிப் பணத்தில் திறமையான வசதி குறைந்த 8 மாணவர்களுக்கு மாதந்தோறும் தலா ரூபா 500 வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வருடத்தின் நிகழ்வுகள்

இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலை மாணவிகளுக்கு உதவி :-

எங்கள் சங்கத்தின் அன்பளிப்பான நிலையான வைப்பிலுள்ள ரூபா 100,000/= இல் வரும் வட்டிப்பணத்தில் திறமையான வசதி குறைந்த 3 மாணவர்களுக்கு வருடந்தோறும் தலா ரூபா 3,500/= வழங்கப்பட்டு வருகின்றது.

கல்லூரி வர்த்தகப்பிரிவு உயர்தரப்பரீட்சையில் முதல் இடம் பெற்ற மாணவிக்கு மிதிலா ஸ்ரீபத்மநாதனால் 5000 /= வழங்கப்பட்டது.

**திருமதி மிதிலா ஸ்ரீ பத்மநாதன்**
(பொதுச்செயலாளர்)
**திருமதி அபிராமிகயிலாசபிள்ளை**
(தலைவி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலிப் பூக்கள்



**திருமதி பஞ்சலட்சுமி**

**திருமதி திலகவதி விஜயரட்ணம்**

**திருமதி தயாநிதி செல்வநாயகம்**

**செல்வி புஷ்பா செல்வநாயகம்**

சமீபத்தில் எம்மை விட்டு பிரிந்த, அன்பும் பண்பும் பாசமும் நேசமும் நிறைந்த, உங்கள் ஆத்மா சாந்திக்காக எல்லாம்வல்ல எம் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

உங்கள் அன்புச் சகோதரிகள்
(பழைய மாணவிகள், யாழ் / இந்து மகளிர் கல்லூரி
O.G.A. Colombo Branch)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி சொல்ல வேண்டும்

மூன்று எழுத்துக்கள் தான் கொண்ட போதும், "நன்றி " என்னும் இச் சொல் அற்புதமானது, ஆனந்தம் அளிப்பது, மானிடப் பண்பை வெளிக்கொணர்வது எனவே நன்றி சொல்வோம். யார், யாருக்கு!?

முதற் கண் இந்த அற்புதமான உலகிலே, கல்வியின் பெருமையை உணரவைத்து, வழிப்படுத்தவல்ல ஒரு குடும்பத்தில் எனைப் பிறக்க வைத்த முழு முதலாம் ஈசனுக்கு எனது நன்றிகள்.

தொடர்ந்து, உயிர்தந்து, உண்டிதந்து, உறையுள் தந்து கல்விச் செல்வம் பெறவைத்து வழிகாட்டிய, என் இருகண்கள் போன்றமைந்த எனது அன்பு நிறை பெற்றோருக்கு என் மனம் நிறைந்த நன்றிகள்.

யாழ் - நாதம் - இச்சஞ்சிகை உருவாகி வெளியிடும் வரை, ஆக்கமும் ஊக்கமும் அன்புடன் தந்த, எமது மன்றத்தலைவி, செயலாளர், இருவருக்கும் எனது உளங்கனிந்த நன்றிகள்.

மேலும் இச்சஞ்சிகைக்கு மனமுவந்து ஆக்கங்கள் தந்துதவிய கல்விமான்களுக்கும், விளாம்பரங்கள் தந்துதவிய வர்த்தகப் பெருந்தகைகளுக்கும், ஆக்கங்களின் அச்சுப்பிரதிகளைச் சரிபார்க்க உதவிய சகோதரிகளுக்கும், இவ்விதழை அழகாக அச்சிட்டுத் தந்துதவிய Unie Arts நிறுவனத்தினருக்கும், எனது மனம் நிறைந்த உளம் கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

*"என்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை*
*செய்ந்நன்றி கொன்ற மகற்கு"*

*யாழ் நாதம் ஆசிரியை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விசேட விருந்தினர் உரையாற்றுகிறார்.




நன்றியுரை வழங்குகிறார் நூலாசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்/ இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் நடன நிகழ்ச்சி



பார்வையாளர்கள்

DESIGNED & PRINTED BY UNIE ARTS (PRIVATE) LTD. COLOMBO 13. TEL: 011 2330195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org